வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.12.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 363 | பக்கங்கள் : 16




## யாழின் கிணற்று நீரை குடிக்கலாமா? ஆய்வு செய்து அறிவிக்க வேண்டும்!

### யாழ். பல்கலையை கோருகிறார் ஆறு. திருமுருகன்



யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ்ப்பாண குடாநாட்டில் கிணற்று நீரை குடிப்பதற்கு பயன்படுத்தலாமா என்பது பற்றி பல்கலைக்கழக துறை சார்ந்தோர் ஆய்வுரீதியாக பரிசோதனைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்தி மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று கலாநிதி ஆறு. திருமுருகன் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மட்டமின்றி வட பகுதி எங்கும் போத்தல் தண்ணீரின் ஆதிக்கம் வலுப்பெற்று மக்களின் பணம் வீண் விரயமாகிறது. அது மட்டுமின்றி போத்தல்

15

## தேர்தலை நடத்துவதற்கு இது பொருத்தமான நேரம்!

### பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, டிசெ. 06

நாட்டில் தேர்தல் நடத்துவதற்கு இது பொருத்தமான நேரமாகும் என்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஊடக மையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுப் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அண்மைய தேர்தல்களில் வெற்றி பெற சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு

15

# 60 சதவீதமான கைதிகள் போதை தொடர்பாளர்கள்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ தகவல்

- 5 இலட்சம் இளையோர் போதைக்கு அடிமை
- காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் துரிதமாகும்!

கொழும்பு, டிசெம்பர் 06

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 26 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 60 சதவீதமானோர் போதைப்பொருள் வியாபாரம், பாவனை மற்றும் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15




## யாழ்ப்பாணம், மட்டு. உள்ளிட்ட எட்டு மாவட்டங்களுக்கு யூரியா!

### அமெரிக்கா வழங்கியது

கொழும்பு, டிசெ. 06

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 8 மாவட்டங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 93 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக அமெரிக்கா 9 ஆயிரத்து 300 தொன் யூரியா உரத்தை கையளித்துள்ளது.

யு. எஸ். எய்ட் நிறுவனத்தின் நிதியுதவியில் வழங்கப்பட்ட இந்த உரத்தை அமெரிக்க

15

## எரிவாயுவின் விலை 250 ரூபாய் எகிறியது




கொழும்பு, டிசெ. 06

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிகப்பட்டுள்ளது.

12.5 கிலோ எடை எரிவாயுவின் விலை 250 ரூபாயால் அதிகரித்து 4 ஆயிரத்து 610 ரூபாயாகவும் 5 கிலோ எடை எரிவாயுவின் விலை 100 ரூபாயால் உயர்ந்து ஆயிரத்து 850 ரூபாயாகவும் இதே போன்று,

15

## வடக்கு ஆளுநர் வெளியிட்ட வர்த்தமானி இரத்தாகிறது!

### ஜனாதிபதி ரணில் பணிப்புரை

கொழும்பு, டிசெ. 06

வடக்கு மாகாண ஆளுநரால் சட்ட முரணாக வெளியிட்ட வர்த்தமானியை இரத்து செய்யுமாறு நீதி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 2022-10-27 அன்று இரு நியதிச் சட்டங்களை உருவாக்கி அவற்றை 2303/29 இலக்க வர்த்தமானியில் பிரசுரித்திருந்தார்.

இது சட்டவிரோதமானது என்று சுட்டிக் காட்டி வடக்கு மாகாண

15

## 2023இல் உள்ளூராட்சி தேர்தல் ஆரம்பகட்ட பணிகள் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 06

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கான ஆரம்பகட்ட பணிகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது என்று அதன் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், வாக்குப் பதிவு மையங்கள், வாகன வசதிகளை உறுதி செய்தல் மற்றும் பணியாளர்களை

15

## டீசலின் விலை ரூ.10 குறைந்தது!

கொழும்பு, டிசெ. 06

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 10 ரூபாய் குறைந்தது.

இதன்படி, ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 420 ரூபாயாக

15

### மகாவலி திட்டத்தின் பெயரால்

## காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டம்!

மட்டக்களப்பு, டிசெ. 06

மகாவலி திட்டத்தின் பெயரால் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகளை அபகரிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிரான் பிரதேச செயகலத்துக்கு செல்லும் கிரான் - புலிபாய்ந்த கல் பிரதான வீதியை மறித்து இந்தப் பாராட்டம் நடத்தப்பட்டது. பிரதேச செயலரை வழிமறிக்கும் நோக்கில்

15

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக பாராளுமன்றம் அருகே போராட்டம்!

### கண்டுகொள்ளாத எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, டிசெ. 06

பாராளுமன்றத்துக்கு அண்மையாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற சுற்று வட்ட சந்தியில் இந்தப் போராட்டம் நடந்த சமநேரத்தில் அதே பகுதியில், அரச நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படாததால் அரச வேலை வாய்ப்பை இழந்த பட்டதாரிகளும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

பட்டதாரிகளினடம் சென்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டக்காரர்களுடன்

15

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் நீண்டகாலத்தின் பின்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இந்தப் பத்தியை மட்டுமின்றி எமது நடவடிக்கைகளையே கூர்ந்து கவனித்து வருபவர் அவர்.

எடுத்த எடுப்பில் கேட்டார், 'உங்கள் பத்திரிகை குழுமத் தலைவர் குகநாதன் மதிக்கின்றவர்களில் முக்கியமான ஒருவர், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயா என்பது உங்களுக்கு தெரியாதோ?' என்று.

'அது தெரியும், அதற்கு இப்போது என்ன வந்தது' என்று கேட்டேன்.

'வடக்கு மாகாண ஆளுநர், தன்னிச்சையாக தனது அதிகாரத்தை மீறி நியதிச்சட்டம் எழுதியது பற்றி நீங்கள் இந்தப் பத்தியில் எழுதிய போது, அதுபற்றி குறைசொல்கின்ற தார்மீக உரிமை சிவஞானம் ஐயாவுக்கு இல்லையே என்று எழுதியிருந்தீர்களே? நியதிச்சட்டம் எழுதுவதற்கும் அவைத் தலைவருக்கும் என்ன சம்பந்தம் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது' என்று கேட்டார் நண்பர்.

ஆளுநர் சட்டத்தை தயாரித்தது தவறான காரியமாக இருந்தாலும், முன்னர் மாகாண சபை இயங்கிய காலத்தில் நியதிச் சட்டங்களை எழுதாமல் இருந்துவிட்டு இப்போது ஆளுநர் தயாரிக்கின்ற போது அவ்வாறு செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்பதற்கு சிவஞானத்துக்கு தார்மீக உரிமை இல்லை என்று இந்தப் பத்தியில் எழுதியிருந்ததைத்தான் நண்பர் சொல்கிறார் என்பது புரிந்தது.

அவர் அவைத்தலைவராக இருந்தாலும், அவரும் அந்த அரசாங்கத்தின் - அதுதான் அவர்களே சொன்ன தமிழர் அரசின் ஓர் அங்கம்தானே?. அதுமாத்திரமல்ல, அந்தப் பத்தியில் இந்தக் குருவி சுட்டிக்காட்டியது, போனதடவை செய்யாதது மாத்திரமல்ல, இனியும் மீண்டும் மாகாண சபை ஆட்சிக்கு வந்தாலும் அதே ஆட்கள்தானே பெரும்பாலும் இடம்பெறுவார்கள் என்ற எமது நம்பிக்கை சரியானதா தவறானதா என்பதையும் நீங்கள் பார்க்கத்தானே போகின்றீர்கள் என்று அவருக்கு சவால்விடுக்கவும் முடிந்தது.

அந்தப் பத்தியை எழுதிய பின்னர் இந்த விடயம் குறித்து நன்கு தெரிந்த மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஒருவருடன் பேசிய போது அவர் சொன்னார், "மாகாண சபை இயங்கியபோது இன்னும் பல நியதிச்சட்டங்களை எழுதியிருக்கலாம் என்பது சரியானது தான். ஆனால், மாகாண சபையில் எழுதப்பட்ட நியதிச்சட்டங்கள் எல்லாவற்றையுமே சரியாக - நேர்த்தியாகக் கொண்டுவருவதில் அவைத் தலைவர்தான் அதிக கவனம்செலுத்திய ஒருவர். அவர் இல்லையென்றால் அவைகூட நிறைவேறியிருக்காது", என்று.

"துறைசார்ந்த அமைச்சர்களே பல சட்டங்களை கட்டுரை எழுதுவதுபோல எழுதி சமர்ப்பித்தபோதெல்லாம் அவற்றை ஒரு நியதிச்சட்டம்போல மாற்றிய முழுப் பெருமையும் சிவஞானம் ஐயாவையே சாரும்", என்றார் அவர்.

"அவருக்கு இருந்த நிர்வாக அனுபவமும் தமிழ், ஆங்கிலம், சிங்கள மும்மொழிப்புலமையும் அவற்றை முறையான சட்டங்களாக எழுத உதவியிருக்கலாம்", என்றேன் நான்.

இப்போது இந்தப் பத்தியில் நாம் சொல்ல வருவது ஆளுநர் தயாரித்த நியதிச்சட்டம் பற்றியது.

அவருக்கு அதற்கு அதிகாரம் இருக்கின்றதா? இல்லையா என்பதைவிட அவர் தயாரித்திருப்பது இரண்டு நியதிச்சட்டங்களை. ஒன்று வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச்சட்டம். மற்றையது சுற்றுலா பயணத்துறை பணியகம் தொடர்பானது. இதில் வேடிக்கை என்னவென்றால், சுற்றுலாத்துறை பணியக நியதிச்சட்டம் ஒன்றை ஏற்கனவே மாகாண சபை இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு ஒக்ரோபர் இருபத்து நான்காம் திகதிய சபை அமர்வில் அங்கீகரித்து, அது வர்த்தமானியிலும் இரண்டாயிரத்து பதினெட்டு ஜனவரி பதினைந்தாம் திகதி வெளிவந்து விட்டது. ஏற்கனவே உள்ள ஒரு நியதிச்சட்டத்தை இரத்து செய்யாமலே புதிய சட்டம் ஒன்றை ஆளுநர் வர்த்தமானியில் வெளியிட்டிருக்கிறார்.

ஆளுநர் வெளியிட்டுள்ள வர்த்தமானியில் தமிழில் உள்ளதற்கும் ஆங்கிலத்தில் உள்ளதற்குமே பல்வேறு குளறுபடிகள்.

அதிகம் ஏன், முதலாவது பக்கத்திலேயே அந்த வர்த்தமானியை வெளியிடும் ஆளுநரின் அறிவிப்பில், அவரின் முகவரியே 'மாகாண சபை, மாகாண சபை வளாகம், கைதடி, யாழ்ப்பாணம்.' என்றிருக்கின்றது. நாமறிந்து ஆளுநருக்கு அவரின் அலுவலகம் யாழ். கச்சேரியடியிலேயே இருக்கின்றது.

இது இங்கே எழுதுகின்ற அளவுக்கு பிரச்னைக்குரியது இல்லை என்றாலும், அதிலுள்ள பல தவறுகளை கவனிக்கமால் கடந்து செல்ல முடியவில்லை.

ஆளுநருக்கு இப்படியொரு நியதிச்சட்டத்தை தயாரிப்பதற்கான அதிகாரம் இருக்கின்றதா என்பது பற்றி நீண்ட விளக்கத்திற்கு நாம் செல்லவில்லை. காரணம் அது நீதிமன்றத்திற்கு செல்ல விருப்பதால், அங்கே அவர்கள் அதைப் பார்த்துக்கொள்ளட்டும்.

முன்னரும், ஏன் இதிலும் - நாம் குறிப்பிட்டிருப்பதுபோல அதே ஆட்கள்தான் அடுத்த மாகாண சபையிலும் எங்கள் பிரதிநிதிகளாக இருக்கப்போகின்றார்கள் என்று எழுதியிருந்தோம். அதற்காக சிவஞானம் ஐயா போன்ற விசயமறிந்தவர்களும் மீண்டும் வரக்கூடாது என்பதல்ல நாம் சொல்ல வருவது.!

- ஊர்க்குருவி

## ஆளுநர் செயலகம் முன்பாக வெள்ளியன்று போராட்டம்!

### இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை நிறைவடைந்த பின்னர் பிற்பகல் 2 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் தீபன் திலீசன் இதனை தெரிவித்தார்.

மேலும், வட மாகாண கல்வி அமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் நிர்வாக ஆளுமையற்ற தன்மை காரணமாகவும் குறித்த போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

வட மாகாண கல்வித் துறையில் உள்ள சீர்கேடுகள் தொடர்பில் 2021 டிசெம்பரில் வட மாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 100 பக்க முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தோம். அதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தனர்.

குறித்த விசாரணை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரை கேட்ட போதும் அது இதுவரை எமக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

முறைப்பாட்டை வழங்கி அண்ணளவாக ஒரு வருடமாகிய போதும் கூட விசாரணை இன்னும் முடிவுறாத நிலைமையில் எமக்கு இதனுடைய பின்னணி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் தவணை ஆரம்பித்த போதும் இரண்டாம் தவணைப் பரீட்சையை வைக்கமுடியாத அளவுக்கு வட மாகாண கல்வி அமைச்சு மற்றும் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் நிலைமை போயுள்ளது. இந்த நிலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ)

## ஓமானில் சிக்கியுள்ள பெண்களை காப்பாற்றுக

### வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, டிசெ. 06

"ஓமானில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகப்பட்டுள்ள எமது பெண்களைக் காப்பாற்று" என ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பினர் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா இலுப்பையடி சந்தியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், "இலங்கை பெண்கள் பாலியல் அடிமைகளா?", "அனைத்தையும் விற்று ஏப்பமிட்டு இப்போது எமது பெண்களின் மானத்தையும் விற்கும் மானம் கெட்ட அரசு", "ஓமானில் பாலியல் துன்புறுதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள எமது பெண்களை காப்பாற்று", போன்ற வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி மற்றும் பெண்கள், பொது மக்கள் என பலரும் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்துடன், இலுப்பையடி சந்தியிலிருந்து நடைபயணமாக சென்ற போராட்டகாரர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வவுனியா காரியாலயத்தை முற்றுகையிட்டும் போராட்டம் நடத்தினர். அத்துடன், அதன் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ஐ)

## நாட்டுக்காக எடுத்த தீர்மானத்தால் இன்றும் நெருக்கடிகளுக்குள் நான்!

### மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, டிசெ. 06

சிறைச்சாலைகளில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றி இருந்தால் நாட்டில் இன்று போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தீவிர மடைந்திருக்காது. நாட்டின் எதிர்கால நலன் கருதி மரண தண்டனையை அமுல்படுத்த எடுத்த தீர்மானத்தால் இன்றும் நான் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர், நல்லாட்சியில் எனது பணிக்குழாமின் செயல்பாடுகளுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால், இந்த செய்தியின் விரிவாக்கம் முழுமையாக குறிப்பிடப்படவில்லை. எனது ஆட்சியில் தேசிய மட்ட 7 செயல்திட்ட குழுக்களை நியமித்தேன். தேசிய போதைப் பொருள் செயலணி அக் காலகட்டத்தில் சிறந்த முறையில் செயல்பட்டது - என்று கூறினார். (ஐ)

## தரம் 5 மாணவர்களுக்கு நாளை இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 06

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் பிரதானமண்டபத்தில் பாடசாலை அதிபர் சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் எஸ். மகேந்திரன், பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
06.12.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மனோ - ஹக்கீமுடனான பேச்சுக்கான அடிப்படை என்ன?

தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசப்படுகின்ற சூழலில் மலையகக் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேசவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதனை தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ், வரவேற்றிருக்கின்றது. தென்னிலங்கையின் பிரித்தாளும் தந்திரோபாயத்துக்கு நாங்கள் இடமளிக்கப் போவதில்லை என்று மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார். தேசிய இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வை காணும் விடயத்தில், தமிழ் மொழியால் ஒன்றுபட்ட பிரதான கட்சிகளுடன் பேசுவது சிறந்த விடயம்தான். அதனை 'ஈழநாடு' வரவேற்கின்றது. ஆனால், மிகவும் சமீபத்தைய அனுபவமொன்றின் அடிப்படையில் நோக்கினால் ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது, அவ்வாறு பேசினாலும் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் மத்தியில் பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் கூடிய இணக்கப்பாடொன்று ஏற்படுமா? அதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? அப்படியோர் இணக்கப்பாடு ஏற்படவேண்டுமென்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்புமாகும்.

இந்த விடயத்தை அழுத்திக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணமுண்டு. ஆறு கட்சிகள் இணைந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தலையீட்டைக் கோரி கடிதம் அனுப்பியிருந்தனர். இந்த முயற்சியை ரெலோ முன்னெடுத்திருந்தது. இதற்கான முதலாவது சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டிருந்தனர். இந்திய பிரதமரின் தலையீட்டை கோரும் முயற்சியில் அனைவரும் இணைந்து பயணிப்பதாகவே இணக்கம் காணப்பட்டது. நீண்ட காலத்துக்குப் பின்னர் அனைத்து தரப்புக்களும் இணைந்து ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைப்பதற்கான வாய்ப்பும் கிட்டியது. ஆனால், இறுதியில் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. ரெலோவால் ஆரம்பத்தில் கூறப்பட்ட விடயங்களுக்கும் பின்னர் தமிழரசு கட்சி கலந்துரையாடல்களில் இணைந்துகொண்ட பின்னர் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்ததைத் தொடர்ந்து மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் குறித்த முயற்சியிலிருந்து வெளியேறினர்.

ஆரம்பத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் விடயங்களை முன்வைப்பதாகவே கலந்துரையாடப்பட்டது. எனவே, இதில் இணைந்து கொள்வதில் மனோ கணேசனுக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் பிரச்னை இருக்கவில்லை. ஆனால், சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டபோது, மனோ கணேசனாலும் ஹக்கீமாலும் அவற்றுடன் இணங்கிச் செல்ல முடியவில்லை. அவ்வாறு இணங்கிச் சென்றால் அவர்களின் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்படும். இதனை கருத்தில் கொண்டே அவர்கள் இருவரும் நட்பு ரீதியாக விலகிக்கொண்டனர். இவ்வாறானதொரு நிலைமை மீளவும் ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மனோ கணேசனும் ஹக்கீமும் ஆளும் தரப்புடன் இணைந்து பயணிப்பவர்கள். அவர்களுக்கு சாதகமான அரசாங்கம் அமைந்தால் அவர்கள் நிச்சயம் அமைச்சரவையில் இடம்பெறுவார்கள். எனவே, அவர்கள் அடிப்படையிலேயே எதிர்ப்பு அரசியல் பின்புலத்தை கொண்டவர்கள் அல்லர். அவர்களைக் குறைகூறவும் முடியாது. அது அவர்களின் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டை அவர்களின் சமூகம் ஆதரிக்கின்றது. ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரச்னை வேறு. தமிழ்த் தேசிய கட்சிகளின் அடிப்படையான அரசியல் நிலைப்பாடு அரச எதிர்ப்பாகும். இந்தப் பின்புலத்தில் எவ்வாறு அனைவரும் ஒரு புள்ளியில் சந்திக்க முடியும்?

அவர்களோடு பேசவுள்ளதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆரம்ப முயற்சியாக சில விடயங்களில் இணக்கப்பாட்டை எட்டுவதா அல்லது இறுதித் தீர்வு தொடர்பில் பேசுவதா - என்பது தொடர்பில் முதலில் கூட்டமைப்புக்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். அண்மையில், சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்ற கட்சிகளின் சந்திப்பின்போது, சில விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகக் கூறியிருந்தனர். ஆனால், அதில் அனைவரும் தொடர்ந்தும் உறுதியாக இருப்பார்களா என்பதில் இன்னும் தெளிவில்லை. எனவே, உடனடியாக எவ்வாறான கோரிக்கைகளை அரசாங்கத்தை நோக்கி முன்வைப்பது, அதில் எவ்வாறு அனைத்து கட்சிகளும் உடன்படலாம் என்பதில் ஒரு தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். நிச்சயம் வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் ஹக்கீம் உடன்படப் போவதில்லை. ஹக்கீம் மட்டுமல்ல கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள் எவருமே உடன்படப் போவதில்லை. மனோ கணேசனுக்கு அது பிரச்னை இல்லை. ஆனால், அடுத்துவரவுள்ள அரசாங்கத்துடன் இணங்கிச் செல்வதற்கான வாய்ப்பு இருந்தால் - உதாரணமாக சஜித் பிரேமதாஸ தலைமையில் ஓர் அரசாங்கம் இடம்பெறுமாக இருந்தால் மனோ கணேசன் அதில் நிச்சயம் இடம்பெறுவார். அவ்வாறான சூழலில் தங்களின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு பாதகம் ஏற்படாத வகையிலேயே அவர் முடிவுகளை எடுப்பார்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் மாகாண சபை தேர்தலை உடனடியாக வைக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்களை அமுல்படுத்துவது, மாகாண சபை சட்டத்தில் மாற்றங்களைக் கோருவது போன்ற விடயங்களில் அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதில் பிரச்னை இருக்காது. இந்த அடிப்படையில் பயணித்தால் தொடர்ந்தும் ஆரோக்கியமாகப் பயணிக்க முடியும். இல்லாவிட்டால் கடிதம் அனுப்பும் விடயத்தில் நடந்ததே மீண்டும் நிகழும்.

# பருத்தித்துறை பிரதேச சபையின் 'பட்ஜெட்' ஏகமனதாக நிறைவேற்றம்

*யாழ்ப்பாணம், டிசெ. 06*

*பருத்தித்துறை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.*

*பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டக் கூட்டம் முற்பகல் 10:30 மணியளவில் தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.*

*நேற்றைய அமர்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஓர் உறுப்பினருமாக 20 பேரும் வரவு - செலவுத் திட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர்.*

*இதனால் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.*

*21 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான எஸ்.தியாகலிங்கம் அண்மையில் காலமானதால் நேற்றைய சபை அமர்வில் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*"பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட செய்தி எமது பிரதேசத்துக்கான அபிவிருத்தியில் சபை உறுப்பினர்கள் அனைவரினதும் ஒருமித்த பயணத்தை எடுத்துக் காட்டுகின்றது" - என்று தவிசாளர் அ.சா. அரியகுமார் ஊடகங்களிடம் தெரிவித்தார்.* (அ-02)

# கைப்பற்றப்படும் ஹெரோயின் மீண்டும் மக்களிடம் வருகின்றது

## நீதி அமைச்சர் கூறுகின்றார்

*கொழும்பு, டிசெ. 06*

*சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினரால் கைப்பற்றப்படும் ஹெரோயின் பின்னர் மீண்டும் சந்தைக்கு வரும் நிலை காணப்படுவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செலவீனங்கள் மீதான வரவு-செலவுத் திட்ட குழு நிலை விவாத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*ஹெரோயினை கைப்பற்றும் பொலிஸ் அதிகாரிகளே அதனை மக்களிடமே திருப்பி அனுப்புவதை அண்மைக்காலமாக காணக்கூடியதாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.*

*அவ்வாறான தவறுகளை செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.* (அ)

# கடற்றொழிலாளர் சமூக பிள்ளைகளின் ஓ. எல். பெறுபேறை கேட்கிறார் ஆளுநர்!

*யாழ்ப்பாணம், டிசெ. 06*

*கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகளை சமர்ப்பிக்குமாறு, வட மாகாண ஆளுநரின் கடிதத்துக்கு அமைய, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இது குறித்து மேலும் தெரியவருவதாவது,*

*கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகளை 2011இல் இருந்து 2021 வரை பகுப்பாய்வு செய்து டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு, மற்றும் பெறுபேறுகள் குறைவடைதல் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கையை கோரியதாக தெரிவித்தார்.*

*எவ்வித இன, மத, சமூக பேதமும் இல்லாமல் பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்கும் போது குறிப்பிட்ட சமூகத்தின் விபரங்களை மாத்திரம் திரட்டுவது மாணவர்கள் மத்தியில் வேறுபாடுகளை உருவாக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.*

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 06 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
உங்கள் செயல்கள் வெற்றியாகும். ஆதாயம் அதிகரிக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். பொருளாதார நிலை உயரும்.எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.

**இடபம்**
எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் உண்டாகும்.வெளியூர் பயணத்தால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்திற்காக செலவுகள் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**மிதுனம்**
தடைபட்டிருந்த வருவாய் வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் நிலை சீராகும். பிரச்னைகள் விலகும். வருமானம் அதிகரிக்கும்.எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கடகம்**
வியாபாரத்தில் இருந்த தடை விலகும். எதிர்பார்த்த வரவு உண்டு. கடன்களை அடைப்பீர்கள்.மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.தடைபட்டிருந்த செயல்கள் நடந்தேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்**
நிதானமுடன் செயல்படுவதால் நன்மையுண்டு.உங்கள் ஆற்றல் வெளிப்படும் நாள். திறமையுடன் செயல்பட்டு எதிர்பார்த்தவற்றில் லாபமடைவீர்கள். அரசு வழியில் நன்மைகள் உண்டாகும்.

**கன்னி**
விழிப்புணர்வு தேவைப்படும் நாள். உங்கள் செயல்களில் எதிர்ப்புகளை சந்திப்பீர்கள். சிலர் மேலதிகாரியின் கண்டிப்பிற்கு ஆளாவீர்கள்.மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் தள்ளிப்போகும்.

**துலாம்**
புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்கள் துணையுடன் ஒரு செயலில் வெற்றி காண்பீர்கள். ஆதாயமான நாள். உங்கள் செயல்களில் இன்று தெளிவு இருக்கும்.

**விருட்சிகம்**
எதிரிகளின் தொல்லை விலகும். முயற்சியில் போராடி வெற்றி அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். நீண்ட நாள் பிரச்னை ஒன்றுக்கு முடிவு கட்டுவீர்கள். பிறரை அனுசரித்துச் சென்று ஆதாயம் அடைவீர்கள்.

**தனுசு**
உங்கள் முயற்சிகள் இன்று எதிர்மறையாகும். சொத்து விவகாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைய அடைய முடியாமல் போகும். பிள்ளைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**
அரசாங்க விஷயத்தில் நிதானம் தேவை. இல்லையெனில் சட்ட சிக்கலுக்கு ஆளாக வேண்டி வரும்.அறிமுகம் இல்லாதவருடன் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். பேச்சில் கவனம் தேவை.

**கும்பம்**
உங்கள் எண்ணப்படி செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். ஆரோக்கியத்தில் உண்டான சங்கடம் விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மீனம்**
புதிய முதலீடுகள் இன்று வேண்டாம். பண விவகாரங்களில் கவனம் தேவை. குடும்பத்தினர் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

# ஜெயலலிதா 6ஆவது நினைவுதினம் கட்சியினர் தனித்தனியாக அஞ்சலி!

சென்னை, டிசெ. 06

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரின் நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம், டி. டி. வி. தினகரன், சசிகலா ஆகியோர் தனித்தனியே பேரணியாக சென்று அஞ்சலி செலுத்தினர்.

அ. தி. மு. க. இடைக்கால பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் முன்னாள் அமைச்சர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் அமைதி ஊர்வலமாக சென்று ஜெயலலிதா நினைவிடத்தில் 10 மணிக்கு அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் காலை 10.30 மணிக்கு ஜெயலலிதா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

இவர்களை தொடர்ந்து, அ. ம. மு. க. பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன் 11 மணிக்கும், சசிகலா 11.30 மணிக்கும் தனித்தனியாக தங்கள் ஆதரவாளர்களுடன் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# “பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து வெல்வோம்!”

சென்னை, டிசெ. 06

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய சசிகலா, “எதிரிகளை வென்று வீறுநடை போட நாம் ஒன்றாக வேண்டும்” என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

பின்னர், கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழகத்தில் ஜெயலலிதா ஆற்றிய அரும்பணிகளை எந்நாளும் நினைவில் கொண்டு கடமை உணர்வோடு, பணியாற்ற உளமார உறுதி ஏற்போம். நமது தலைவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து பயணித்திட உறுதி ஏற்போம்.

ஒரு தொண்டர் கூட விலகி நிற்காமல், ஓர் அணியில் நின்று, ஒற்றுமையோடு இணைந்து வரும் பாராளுமன்ற தேர்தலில் எதிரிகளை வென்று வீறுநடை போட நாம் ஒன்றாக வேண்டும். கழகம் வென்றாக வேண்டும். கரம் கோப்போம், உறுதி ஏற்போம்” என்று கூறினார். (ஐ)

# சர்வாதிகார போக்குக்கு நாம் முடிவு கட்டுவோம்!

## பன்னீர்செல்வம் வலியுறுத்து



சென்னை, டிசெ. 06

ஜெயலலிதாவின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், “சர்வாதிகார போக்குக்கு முடிவு கட்டுவோம்”, என்று கூறினார்.

உறுதிமொழி ஏற்பின்போது ”அ. தி. மு. க. தலைவரை தொண்டர்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விதியை வகுத்துத் தந்தவர் முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர்., அதனை நிறைவேற்றியவர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. அந்த விதியை சதியை துணையாகக் கொண்டு தன்னலத்திற்காக மாற்றியுள்ள சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு மீண்டும் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா வகுத்த வழியில் தொண்டர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை மீட்டெடுத்து சர்வாதிகார போக்குக்கு முடிவு கட்டுவோம் என சபதம் ஏற்கிறோம்.

பெண்ணின வளர்ச்சியே சமூக வளர்ச்சி என்று இலக்காகக் கொண்டு மிதிவண்டி, தாலிக்கு தங்கம், விலையில்லா அரிசி, பணிபுரியும் மகளிர்க்கும் இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட திட்டங்களை ஜெயலலிதா வழங்கினார். ஆனால், அரசியல் காழ்ப்புணர்ச்சியால் ஆளும் தி. மு. க. அரசு அவற்றை இரத்து செய்திருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கிறோம். அதே வேளையில் ஜெயலலிதாவின் கருணை மிக்க ஆட்சியை திரும்பிக் கொண்டு வர உறுதியேற்கிறோம்- என்றார். (ஐ)

# “மிகப்பெரிய கூட்டணி அமைத்து தேர்தலில் வெற்றி பெறுவோம்”

சென்னை, டிசெ. 06

அ. தி. மு. கவை கட்டிக்காப்போம். வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய கூட்டணி அமைத்து வெற்றி காண்போம் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி உறுதிமொழி ஏற்றார்.

”எதிரிகள் ஒருபுறம், துரோகிகள் மறுபுறம் என்றிருக்கும் சூழல் பொய்வழக்குகளை முறித்து சதிவலைகளை அறுப்போம். குடும்ப ஆட்சியின் கொள்ளைக் கூட்டத்தை வீட்டுக்கு அனுப்ப சபதம் ஏற்போம். அதிமுக என்பது ஆயிரங்காலத்து பயிர். தமிழ்நாட்டு மக்களுக்கு தொண்டாற்றி தழைத்து நிற்கும் ஆலமரம். இதை யாராலும் அசைத்துப் பார்க்க முடியாது. அ. தி. மு. கவை கட்டிக்காப்போம். இந்திய அரசியல் சரித்திர வானில் பாராளுமன்றத்தின் 3ஆவது பெரிய கட்சியாக கழகத்தை மாற்றியவர் ஜெயலலிதா. பாராளுமன்றத்



தேர்தலுக்காக வெற்றிக் கூட்டணி, மெகா கூட்டணி அமைத்து வரலாற்று வெற்றிக்கு சூளுரைப்போம். நாற்பதும் நமதே நாளையும் நமதே என்று சபதம் ஏற்போம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று வெற்றி முழக்கமிட்டு திக்கெட்டும் வெற்றியை படைத்திடுவோம். அதற்காக அயராது உழைப்போம் - என்றார். (ஐ)

# முட்டை விலை 100 ரூபா?

கொழும்பு, டிசெ. 06

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை 100 ரூபா வரை அதிகரிக்க லாம் என அரச கால்நடை வைத்தியர் சங்கத்தின் தலைவர் கால்நடை வைத்தியர் சிசிர பியசிறி தெரிவித்தார்.

முட்டை நுகர்வு குறைந் துள்ளதால் தற்போது முட்டை யின் விலை 50 முதல் 60 ரூபா வரையில் இருப்பதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை நுகர்வு அதிகரிக்கும் நிலையில் இந்த விலை உயரும் காணப்படும் எனவும் அவர் கூறினார்.

கண்டிப் பகுதியில் இடம் பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# பருத்தித்துறை நகரசபையின் வரவு-செலவு திட்டம் தோல்வி!

யாழ்ப்பாணம், டிசெ. 06

பருத்தித்துறை நகரசபை வரவு-செலவுத் திட்டம் தோல் வியடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கட்டுப்பாட்டிலுள்ள பருத்தித்துறை நகர சபைக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் வரவு-செலவுத் திட் டத்திற்கு ஆதரவாக 7 வாக்கு களும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் 4 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி, தமிழ் விடுதலை கூட்டணி, சமத்துவ கட்சியின் சுயாதீன தரப்பின் தலா ஒவ்வொருவர் என 7 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் 6 உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஒரு உறுப்பினர், ஈ.பி.டி. பியின் ஒரு உறுப்பினர் ஆகி யோர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதன்படி 1 மேலதிக வாக்கால் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.

இதனை தொடர்ந்து தனக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மீள திருத்திய பட்ஜெட்டை கொண்டுவர விருப்பதாக அறிவித்து தவி சாளர் கூட்டத்தை நிறைவு செய்தார். (அ-02)

# உள்ளூராட்சி தேர்தல் திகதி ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்!

## ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.06

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தைப் பெற்றுள்ளதாகவும், அதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜன வரி 9ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் எஸ்.ஜி.புஞ்சிஹேவ தெரிவித்தார்.**

எவ்வாறாயினும், தேர்தல் ஆணைக்குழுவிடம் சட்டமா அதிபர் தெரிவித்த கருத்தை ஊடகங்களிடமோ அல்லது வேறு எந்த தரப்பினரிடமோ வெளியிட முடியாது என்றும், 2023 மார்ச் 19 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடத் துவதற்கும் உள்ளூராட்சி அமைப்புகளை நிறுவுவதற்கும் எந்த சட்டத் தடையும் இல்லை என்றும் அவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

மூன்று நாட்களுக்கு முன் னர் எனக்கு தெரிவிக்கப்பட்ட சட்டமா அதிபரின் கருத்தை தேர்தல் ஆணைக்குழுவின் மற்ற உறுப்பினர்களுடன் இந்த



வாரம் விவாதித்து, இறுதி முடிவு எடுத்து, வர்த்தமானி அறிவிப்பை விரைவில் வெளி யிடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை செய்வேன். உள் ளூராட்சி தேர்தல் திகதிகளை அறிவிப்பேன்.

இந்த வர்த்தமானி வெளியி டுவதற்கு முன் வரும் நாட்க ளில் ஏதேனும் சட்ட அல்லது அரசியலமைப்பு தடைகள் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மிகவும் தாமதமான உள்ளாட்சித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட தேர் தல் ஆணைக்குழு உறுதியாக உள்ளது. தேர்தல்களை சரி யான நேரத்தில் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அரசிய லமைப்பின்படி கட்டளையி டப்பட்டுள்ளது.

அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தலை நடத்துவதை தாமதப்படுத்த முடியாது. ஆனால் சட்டப்பூர் வமாக நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக தேர்த லுக்கு செல்லலாம் என்று உயர் நீதிமன்றம் பல சந்தர்ப்பங் களில் தீர்ப்பளித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான முக்கிய முன்நிபந்தனைகளில் ஒன்று- உள்ளூராட்சி வட்டார அமைப் பின் கீழ் 2022 வாக்காளர் பதி வேட்டின் வாக்காளர் பட்டி யலைத் தயாரிப்பது-அடுத்த சில நாட்களில் முடிக்கப்படும்.

2022 இடைக்கால பட் ஜெட்டில் தேர்தலை தாமதப் படுத்த எந்த நிதிப் பிரச்னை யும் இல்லை. தேர்தல் ஆணை யத்துக்கு 10 பில்லியன் ஒதுக் கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 19 ஆம் திகதிக் குள் 340 உள்ளூராட்சி மன்றங் களையும் ஸ்தாபிப்பதற்கு வழி வகுக்கும் வகையில் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படும்.

இது தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் டிசெம்பர் 6 ஆம் திகதிக்கும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திக திக்கும் இடையில் வெளியி டப்படும்-என்றார். (அ)

# போதைக் கலாசாரம் தொடர்பில் யாழில் நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 06

சமூக நெருக்கடிகளும் போதைக் கலாசார மும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரை யாடல் நாளை புதன்கிழமை மாலை 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமை உரையை யாழ். போதனா வைத்தியசாலை யின் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா ஆற்றவுள்ளதுடன், கருத்து ரையை அருட்தந்தை கலாநிதி வின்சன்ற் பற் றிக் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோ ரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையா டல் இடம்பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள் ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத் தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# வேலைக்காக வெளிநாடு பறக்கும் இலங்கையர்கள்!

கொழும்பு, டிசெ. 06



இலங்கையில் இருந்து கடந்த 11 மாத காலப்பகுதிக் குள் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளி நாடுகளுக்குத் தொழில் தேடி பயணித்துள்ளனர்.

இவர்களில் சுமார் 2 லட்சத்தி 89 ஆயிரத்து 395 பேர் இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக சென்றுள்ளனர்.

மேலும் 15000 பேர் அளவில் பதிவு செய்யாத நிலையில் சட்டவிரோத வழிகளில் பயணித்துள்ளனர்.

இந்த வருட இறுதிக்குள் இலங்கை யில் இருந்து சட்ட ரீதியான பதிவுக ளுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளவர்களின் எண் ணிக்கை 3 இலட்சத்து 10 ஆயிரத்தை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய, நாளொன் றுக்கு 850 பேர் இலங்கையில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக ளுக்காக நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் மேற்பட்ட 95 வீதமா னோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே தொழில் தேடிச் சென்றுள்ளனர். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் தெல்லிப்பழையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 06

சட்டவிரோதமான முறை யில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட 2ஆயிரத்து 640 வெளிநாட்டு சிகரெட் உடன் 39 வயதுடைய நபர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வரிகள் விதிக்கப்படாமல் 132 சிகரெட் பெட்டிகளை இலங்கைக்குள் கடத்தி அதனை உடைமையில் வைத்திருந்த நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என



பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபரை மல்லா கம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெல் லிப்பழை பொலிஸார் கூறினர். (அ)

# தினமும் 60 முதல் 70 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, டிசெ. 06

நாட்டில் பரவி வரும் வைரஸ் நோய்களால் தினமும் 60 முதல் 70 சிறார்கள் மருத்துவமனையில் அனு மதிக்கப்படுவதாகவும், அந்த நோய் களில் இருந்து சிறார்களைப் பாது காக்க சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண் டும் என்றும் தேசிய தொற்று நோய் கள் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது காய்ச்சல் உள்ளிட்ட பல வைரஸ் நோய்கள் பரவி வருவதாகவும், வைரஸ் காய்ச்சல், காய்ச்சல், டெங்கு மற்றும் கோவிட் உள்ளிட்ட பல நோய்கள் தொடர்ந்து பதிவாகி வருவ தாகவும் அந்த அதிகாரி கூறினார்.

'கோவிட்' வைரஸிலிருந்து தங்களைப் பாது காத்துக் கொள்ள பின்பற்றப்படும் சுகாதார பரிந்து ரைகளை மக்கள் பின்பற்றினால், இந்த வைரஸ் நோய்களிலிருந்தும் பாதுகாக்க முடியும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

# தடையில்லா மின்சாரம் வழங்க ஓர் அலகுக்கு 56.90 ரூபா செலவு

## அமைச்சர் காஞ்சன விளக்கம்



கொழும்பு, டிசெ. 06

**மின்சாரத்தை தடையின்றி வழங்கப்படுவதற்கு மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மின்சார சபையின் மதிப்பீடுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்காக, மின்சார சபை ஒரு அலகுக்கு 56.90 ரூபாவை செலவிடவேண்டியிருக்கும்.

தற்போதைய கட்டணத்தின் அடிப்படையில் ஒரு அலகுக்கு சராசரியாக ரூ.29.14 வசூலிக்கப்படுகிறது. 423.5 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்படும்.

தரவுகளின்படி, 6,709,574 பேர் இலங்கை மின்சார சபையின் நுகர்வோராக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில், 1,460,828 நுகர்வோர் ஒரு மாதத்துக்கு பூச்சியத்திலிருந்து 30 அலகு வரை பயன்படுத்துகின்றனர் ஒரு அலகுக்கு ரூ.8 மாத்திரமே செலுத்துகின்றனர்.

மேலும், 1,683,172 நுகர்வோர் ஒரு மாதத்திற்கு 30 முதல் 60 அலகுகளை பயன்படுத்துகின்றனர். தற்போது அவர்கள் ஒரு அலகுக்கு ரூ.10 மாத்திரமே செலுத்துகின்றனர்.

1,702,515 நுகர்வோர் ஒரு மாதத்திற்கு 60 முதல் 90 அலகுகள் வரை பயன்படுத்துகின்றனர். அவர்கள் ஒரு அலகுக்கு ரூ.16 மாத்திரமே செலுத்துகின்றனர்.

சராசரியாக 1,559,131 நுகர்வோர் மாதாந்தம் 90 முதல் 180 அலகுகளை உபயோகிக்கின்றனர். அவர்கள் ஒரு அலகுக்கு 50 ரூபா செலுத்துகின்றனர். சுமார் 303,928 நுகர்வோர் 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்துகிறார்கள். அதற்காக அவர்கள் ஒரு அலகுக்கு ரூ.75 செலுத்துகிறார்கள்.

எனவே உயர்மட்டத்தில் இருப்பவர்கள் மின்சாரத்திற்கு சராசரி விலைக்கு மேல் செலுத்தும் அதே வேளையில், குறைந்த பிரிவினருக்கு அதிக மானியம் வழங்கப்படுகிறது.

மானியத்துடன் கூடிய மின்சார விநியோகத்திற்கான எஞ்சிய நிதி திறைசேரியினால் ஏற்கப்படுகிறது.

எனவே, எனது தனிப்பட்ட கருத்துப்படி, ஒவ்வொரு மின்சார வாடிக்கையாளரும் ஒரு அலகுக்கு ரூ. 56.90 செலுத்த வேண்டும். அதே நேரத்தில் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு நேரடி பண உதவித்தொகை வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# ஏழு பொலிஸ் குதிரைகள் உணவின்மையால் மரணம்?

கொழும்பு, டிசெ. 06

மிகவும் பெறுமதியான 07 குதிரைகள் உணவுப் பற்றாக்குறையால் உயிரிழந்துள்ளதாக வெளியான தகவலை பொலிஸ் குதிரைப்படை பிரிவு மறுத்துள்ளது.

சுமார் 3500 அமெரிக்க டொலர் பெறுமதியான குதிரைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், இது தொடர்பான விசாரணையின்போது, கடந்த 3 மாதங்களில் மூன்று குதிரைகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவற்றுள் இரண்டு குதிரைகள் சுகவீனம் காரணமாக உயிரிழந்ததாக பொலிஸ் குதிரைப்படை பிரிவு தெரிவித்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஒரு குதிரை உயிரிழந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த குதிரைகளுக்கு வழங்கப்படும் சில தீவனங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்னைகளால் இலங்கைக்கு தீவனம் இறக்குமதி செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 4 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 06

மொறட்டுவை, லுனாவ, ரதுகுருச அடுக்கு மாடி குடியிருப்பின் 4 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவெல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மொறட்டுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பிரத்தியேக ஆளணிக்கு அதிக செலவா? அடியோடு மறுக்கின்றார் மைத்திரிபால

கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதியின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 53 வீதத்தை தனது தனிப்பட்ட ஊழியர்களுக்காக பயன்படுத்தியதாகவும், அதற்கு பதிலாக தேசிய மட்டத்தில் பாரிய திட்டங்களுக்கு செலவிட்டதாகவும் வெளியான செய்திகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மறுத்துள்ளார்.

“எனக்கும் எனது முன்னோடியான மகிந்த ராஜபக்ஷவும் எமது தனிப்பட்ட ஊழியர்களுக்காக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செலவிட்ட செலவுகள் குறித்த விவரங்களைக் கோரிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் லயனல் குருகேவை மேற்கோள் காட்டி பல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் என்னைத் தாக்கத் தொடங்கியுள்ளன. எவ்வாறாயினும், அவருக்கு தகவல் வழங்கியவர்கள் தவறான தகவல்களை வழங்கியுள்ளனர்,” என பாராளுமன்ற உறுப்பினர் சிறிசேன தெரிவித்தார்.



“எனக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தேசிய அளவிலான முக்கிய திட்டங்களுக்கு செலவு செய்துள்ளேன். இதில் கிராம சக்தி திட்டம், சிறுநீரக நோய் தடுப்பு திட்டம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு திட்டம் ஆகியவை அடங்கும். போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட சிலருக்கு மரண தண்டனை விதிக்க ஆவணங்களில் கையெழுத்திட்டேன். அந்த காலப்பகுதியில் இவர்களுக்கு மரண தண்டனை வழங்க அனுமதித்திருந்தால் போதைப் பொருள் விவகாரம் இன்று பாரதூரமானதாக இருந்திருக்காது. மேலும் நான் ஸ்மார்ட் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலர்களுக்கு 1000 மடிக்கணினிகள் வழங்கினேன்.

“இந்த ஊடக நிறுவனங்கள் தங்கள் அறிக்கைகளை சரிசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்,” என்றும் அவர் கூறினார். (அ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த முடியும்!

## சட்டமா அதிபர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 06

பல்வேறு பிரச்னைகள் காணப்பட்டாலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது சாத்தியம் என சட்டமா அதிபர் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம் தேர்தலை நடத்துவது சாத்தியம் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பில் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி எல்லை நிர்ணயக் குழு காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்படுவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்தது.

அதன்படி, இது தொடர்பான சட்டமா அதிபரின் பரிந்துரை தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது. (அ)

# மருந்துகளின் விலைகளை அதிகரிக்கவேண்டிய நிலை

கொழும்பு, டிசெ. 06

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் அனைத்து மருந்துப் பொருட்களின் விலைகளும் அடுத்த மூன்று மாதங்களில் மீண்டும் அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் விலைகள் அதிகரிக்கப்படலாம். பல வருடங்களாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் மக்களுக்கு குறைந்த விலைக்கு மருந்துகளை வழங்கி வருகின்றது.

இந்த நிலையில் 80 வீதமான மருந்துகளின் கையிருப்புகள் முடிவடைந்து விட்டன. இதனால் பொதுமக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் .

தற்போதைய நாணயமாற்று விகிதத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை ஏழு எட்டு மாதங்களுக்கு முன்னர் வழங்கிய விலைக்கு வழங்க முடியாது என அரச மருந்தாக்கல் கூட் டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுசா தசநாயக்க தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக நாணய மாற்று வீதம் மாற்றமடைந்துள்ளது. டொலர் தற்போது 360 ரூபாயாக காணப்படுகின்றது.

இதன் காரணமாக நாங்கள் இறக்குமதி செய்யும் மருந்துகளின் விலைகள் மாற்றமடையும் என அவர் கூறினார். (அ)

# பாடசாலை கன்ரீனில் போதை மாத்திரைகள்!

கொழும்பு, டிசெ. 06

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் இருந்து ஏராளமான போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உணவகத்தில் இருந்து 7 ஐஸ் பொதிகளும் 38 மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கோவிட் காலத்தில் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்த இராணுவ அதிகாரி

## அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 06

இலங்கையின் முன்னணி இராணுவ அதிகாரிகளில் ஒருவர் கோவிட் கால தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரளவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.



கடந்த இரண்டரை வருடங்களாக கோவிட் நோயாளிகளையும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருகின்றவர்களையும் தனிமைப்படுத்தி அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதரும் நபர்கள் ஹோட்டல் அறைகளில் தனிமைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் ஹோட்டல் அறை மற்றும் உணவுகளுக்காக மட்டும் நாளாந்தம் 14 ஆயிரம் ரூபா வரை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையில் ஆயிரம் ரூபா வீதம் நாளாந்தம் இராணுவ அதிகாரி ஒருவரின் மனைவியின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம்சாட்டினார். (அ)

# அமெரிக்க முகவரமைப்பின் துணை நிர்வாகி கொழும்பில்

கொழும்பு, டிசெ. 06

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (யு.எஸ்.எயிட்) ஆசிய பணியகத்தின் துணை நிர்வாகி அஞ்சலி கௌர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

துணை நிர்வாகி அஞ்சலி கௌர் தனது விஜயத்தின் போது சிரேஷ்ட அரச மற்றும் சிவில் சமூகத் தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.



இலங்கையின் உணவுப் பாதுகாப்பு, விவசாயம், எரிசக்தி மற்றும் அரசியல் துறைகளில் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அவர் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# ரணில் ஜனாதிபதியாகிய பின் பொருள்களின் விலை குறைவு!

## கூறுகின்றார் மஹிந்தானந்த

கொழும்பு, டிசெ. 06

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தா னந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி தொகுதியின் வெலிகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு கூறினார்.

அத்துடன், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்ற பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியை முன்னேற்றவோ, அக்கட்சியின் அங்கத்துவத்தை அதிகரிக்கவோ செயற்படாமல் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 2 ½ வருடங்களில் நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த தற்போதைய ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)



# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, டிசெ. 06

ஐஸ் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தரும் கைது செய்யப்பட்டதாக தும்மல்சூரிய பொலிஸார் தெரிவித்தனர்.

தும்மல்சூரிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் புலனாய்வுப்பிரிவின் அதிகாரி ஒருவருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் சேவையில் இருந்த ஓய்வு பெற்று தும்மல்சூரிய ஹேனேகெதர பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரும், கொழும்பு கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் அதிகாரியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்படும் போது சந்தேக நபர்களிடம் ஐஸ் போதைப் பொருளும், 5 கிராம் ஹேஸ் போதைப் பொருளும் இருந்துள்ளன.

கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியிடம் இருந்த சந்தேகத்திற்குரிய இலக்கத்தகடு பொருத்தப்பட்டிருந்த கார் மற்றும் அவர் குளிப்பிட்டிய பிரதேசத்தில் வாடகைக்கு தங்கியிருந்த வீட்டையும் பொலிஸார் சோதனையிட்டனர். (அ)

# மின்சார சபையை எட்டாக உடைக்க அரசுக்கு ஆணை கொடுத்தது யார்?

## லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி

கொழும்பு, டிசெ. 06

அரச வளங்களை பாதுகாப்பதாக கூறி வந்த அரசாங்கம் எவ்வாறு மின்சார சபையை எட்டாக உடைக்கும் என எதிர்க்கட் சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இவ்வாறான விடயங்களைச் செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு ஆணை உள்ளதா என்றும் கேள்வி எழுப்பினார்.

எவ்வாறாயினும் இது குறித்து அமைச்சரவையில் பேசப்படவில்லை என்றும் செய்திகளை கொண்டு முடிவுக்கு வரவேண்டாம் என்றும் சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல "செய்தித்தாள்களில் வந்ததைப் பற்றி நான் பேசவில்லை. அந்த குழுவில் நானும் இருக்கிறேன்.இதுபற்றி அமைச்சர் காஞ்சன அங்கு கூறினார்"-என்றார். (அ)

# 25 ஆயிரம் அரச ஊழியர்கள் இந்த மாத இறுதியில் ஓய்வு

கொழும்பு, டிசெ. 06

இம்மாத இறுதியில் 60 வயதில் ஓய்வுபெறும் தீர்மானத்துடன், முழு அரச சேவையிலிருந்தும் சுமார் இருபத்தைந்தாயிரம் பேர் ஓய்வுபெற உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் முழு அரச சேவையிலும் சுமார் 15 இலட்சம் பேர் உள்ளதுடன், இருபத்தைந்தாயிரம் பேர் ஓய்வு பெறுவதனால் அரச சேவை வீழ்ச்சியடையாது.

பொதுப்பணித்துறையில் உள்ள பெரும்பாலான உயர் அதிகாரிகள், 60ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வரும், 31ஆம் திகதி ஓய்வு பெறுவார்கள்.

மேலும், ஓய்வுபெறும் உத்தியோகத்தருக்கு மாற்றீடாக ஒருவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று மேலும் ஒரு வருடத்திற்கு 60 வயதுக்கு மேற்பட்ட அதிகாரியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

அரச சேவையை 65 வருடங்களாக நீடிப்பதாக முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய உயர் பதவிகளுக்கு இளைய அதிகாரிகள் செல்வதற்கு இடையூறாக உள்ளது-என்றார்.

இதனிடையே ஆசிரியர் பணியில் உள்ள சுமார் 2000 பேர் 60 வயதில் ஓய்வு பெற உள்ள நிலையில், அதற்கு தகுதியானவர்களை நிரப்ப கல்வித் துறை அதிகாரிகளிடம் முறையான திட்டங்கள் இல்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுபவர்களே நியமிக்கப்படுவதாகவும், சில சமயம் பல்கலைக்கழக பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதாகவும் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கப்போகும் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பவர்கள் ஆசிரியர்கள் என்றும், அவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின்னர், பாடசாலைகளை தேர்வு செய்து, தேவையான ஆசிரியர்களை உடனடியாக தேர்வு செய்ய வேண்டும் என்றும் ஸ்டாலின் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட 200 வைத்தியர்கள் ஓய்வு பெறவுள்ளமையினால் சுகாதார சேவையில் பாரிய பாதிப்புகள் ஏற்படக் கூடும் என அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்லாமிய ஷரியா சட்டம்:

## ஆப்கானில் தலிபான் ஆட்சியில் பெண்கள் நிலைமை எப்படி உள்ளது?

- யோகிதா லிமயே

மத்திய காபூலில் உள்ள ஒரு பொழுதுபோக்கு பூங்காவில் பெர்ரிஸ் சக்கரம், பம்பர் கார்கள், ஒரு சிறிய ரோலர் கோஸ்டர் ஆகியவற்றை அனுபவிக்கும்போது குழந்தைகளின் மகிழ்ச்சிக் கீச்சொலிகள் காற்றை நிரப்புகின்றன.



அவர்களுடைய தந்தைகள் அவர்களுடன் சவாரிகளில் அமர்கின்றனர், அவர்களை ரசிக்கின்றனர் அல்லது அவர்களைப் படமெடுக்கின்றனர். இருண்ட செய்திகளே வந்து கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் மகிழ்ச்சியின் அரிய தருணங்கள் இவை.

ஆனால் இங்குள்ள குழந்தைகளோடு நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் உரிமை இப்போது அவர்களின் தாய்மார்களுக்கு மறுக்கப்படுகிறது. கடும் கட்டுப்பாடுகளுடன் ஆட்சி மேற்கொள்ளும் தாலிபன்களால் காபூலில் இருக்கும் பூங்காக்களுக்குப் பெண்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் அங்கு பார்க்கும்போது, டசின் கணக்கானவர்கள் குழந்தைகள்



விளையாடுவதை ரசிக்கின்றனர். ஆனால், அதற்கு எதிரில் இருக்கும் ஓர் உணவகம் உள்ள தொலைவு வரை தான், நாங்கள் உட்பட பெண்கள் அனைவரும் பூங்காவை நெருங்கக் கூடிய தொலைவு.

தலைநகரத்திலுள்ள உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்களுக்கும் பெண்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

இந்த விதிகள் நாடு முழுக்க நீட்டிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாலிபன்கள் தங்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற நிலையில் இருப்பதால், ஆப்கான் பெண்களும் சிறுமிகளும் அடுத்து என்ன நடக்கும் என்று அஞ்சுகிறார்கள்.

இந்த நகர்வுகள் நாட்டின் பெரும் பகுதியைப் பாதிக்காது என்று சிலர் கூறுகின்றனர். ஏனெனில் தற்போது பெரும்பான்மையான மக்களுக்கு மாலை நேரம் வெளியில் செல்வதென்பது ஒருவித ஆடம்பரமாக உள்ளது.

இருப்பினும், பல ஆப்கான் சிறுமிகளைப் பொறுத்த வரை, இது தாக்கத்தின் அளவைப் பற்றிய விஷயமில்லை. தாலிபன்களின் நோக்கத்தைப் பற்றிய ஒரு குறியீடாக இது உள்ளது.

"ஒவ்வொரு நாளும், ஆப்கனில் பெண்களாக நாங்கள் புதிய கட்டுப்பாடுகளோடு தான் கண் விழிக்கின்றோம்," என்று ஒரு மாணவி கூறுகிறார். அவரைப் பாதுகாப்பதற்காக அவருடைய பெயரை வெளியிடவில்லை.

"நான் அதிர்ஷ்டசாலி. தாலிபன்கள் வருவதற்கு முன்பு நான் மேல்நிலைப் பள்ளியை முடித்துவிட்டேன். ஆனால், பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கு மூடப்படலாம் என்று அஞ்சுகிறேன். அது நடந்தால் என் கனவுகள் முடிந்துவிடும்."

அவர் சமீபத்தில் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் பங்கேற்றார். தாலிபன்கள் சமீபத்தில் விதித்த கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக, தான் படிக்க விரும்பும் பாடமான இதழியல் பிரிவு இனி பெண்களுக்குக் கிடைக்காது என்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தார்.

**பெண்கள் பூங்கா செல்வதற்குத் தடை விதித்த தாலிபன்**

"அது எவ்வளவு கடினமானது என்பதை என்னால் விவரிக்க முடியாது.



சிலநேரங்களில் சத்தமாகக் கத்த வேண்டும் போலிருக்கும்," என்று அந்த மாணவி கூறும்போது, அவருடைய குரலில் விரக்தி தெரிந்தது.

ஆப்கானில் பெண்களுக்கான இடங்கள் குறைந்து வருவதால், சிலர் தாலிபன்களின் ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க முயல்கின்றனர்.

சமூக ஆர்வலர் லைலா பாசிம், பெண்களுக்கான நூலகத்தை சிலரோடு இணைந்து நிறுவியுள்ளார். பல்வேறு பாடங்களை, பல்வேறு மொழிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான நூல்கள் அதில் உள்ளன.

"இதன்மூலம், ஆப்கான் பெண்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் தாலிபன்களுக்கு காட்ட விரும்புகிறோம். அதோடு குறிப்பாக கல்வியறிவை இழந்த பெண்களுக்கு நடுவில் புத்தகம் படிக்கும் கலாசாரத்தை விரிவுபடுத்துவது எங்கள் இரண்டாவது குறிக்கோள்," என்று அவர் கூறுகிறார்.

அவர் தனது நாட்டை ஆட்சி செய்யும் ஆண்களுக்கு எதிராகக் குரல் எழுப்புவதில் உறுதியாக உள்ளார். கடந்த ஆண்டு முதல் பல போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

"நாங்கள் மரணத்திற்கு அஞ்சவில்லை. தாலிபன்கள் எங்கள் குடும்பங்களை அச்சுறுத்துவார்கள் என்று அஞ்சவில்லை. இந்தச் சமூகத்திலிருந்து தவிர்க்கப்படுவதைக் கண்டே நாங்கள் அஞ்சுகிறோம்.

நாம் இழந்த அனைத்து சுதந்திரங்களையும் நினைத்து எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. மற்ற நாடுகளின் மக்கள் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்கிறார்கள். இங்கு நாங்கள் இன்னும் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுகிறோம்," என்கிறார் பாசிம்.

சில வாரங்களுக்கு முன்பு, பெண்ணுரிமை ஆர்வலர் ஜரிபா யாகூபியுடன் மேலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். ஐ.நாவிடம் இருந்தும் பிறரிடமிருந்தும் அவர்களை விடுவிக்கப் பலமுறை அழைப்புகள் விடுக்கப்பட்ட போதிலும், தாலிபன்களிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

கடந்த வாரம், ஆப்கானிஸ்தானில் கால்பந்து மைதானம் ஒன்றில் ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் மூன்று பெண்கள் உட்பட 12 பேர் சரமாரியாகத் தாக்கப்பட்டனர்.

ஒவ்வொரு நகர்வின்போதும் தாலிபன்களின் தற்போதைய ஆட்சி 1990களில் இருந்த அவர்களுடைய ஆட்சியை ஒத்திருக்கிறது.

"தாலிபன்களின் தற்போதைய கொள்கைகள் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போலவே உள்ளன. 21ஆம் நூற்றாண்டில் ஏற்றுக்கொள்ள முடியாததை நாங்கள் அவர்களுக்குச் சொல்ல முயல்கிறோம்," என்கிறார் லைலா பாசிம்.

நூலகத்திலிருந்து சிறிது தொலைவில் தாலிபன் அறநெறி பொலிஸ் அலுவலகமும் நல்லொழுக்க அமைச்சகமும் உள்ளது. அது ஆப்கான் பெண்கள் அனுமதிக்கப்படாத மற்றோர் இடம்.

"பெண்கள் தங்கள் புகார்களை வைப்பதற்கு வாயிலில் ஒரு பெட்டியை நாங்கள் வைத்துள்ளோம். எங்கள் இயக்குநர் பெண்களை மரியாதை நிமித்தமாகச் சந்திக்க வாயிலுக்குச் செல்கிறார்," என்று செய்தித் தொடர்பாளர் முகமது அகிப் முஹாஜர் கூறுகிறார்.



தாங்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் இஸ்லாமிய ஷரியா சட்டம் பின்பற்றப்படவில்லை எனக் கூறி, பூங்காக்களில் பெண்களைத் தடை செய்யும் முடிவை அவர் ஆதரிக்கிறார்.

"15 மாதங்களாக நாங்கள் எங்கள் சகோதரிகளுக்கு பூங்காக்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பை வழங்கினோம். பெண்கள் ஹிஜாப் அணிவதைப் பின்பற்றச் சொன்னோம்.

ஆனால் சிலர் அதைச் செய்யவில்லை. பூங்காக்களுக்குச் செல்ல ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி நாட்கள் இருந்தன. ஆனால், அது கடைபிடிக்கப்படவில்லை," என்று அவர் கூறுகிறார்.


பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களை ஏன் ஒடுக்குகிறார்கள் எனக் கேட்டபோது, "ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்க உத்தரவுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் எவரும் கைது செய்யப்படுகிறார்கள்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதியை விட

## மத்திய வங்கி ஆளுநர் மீது இலங்கையர்கள் நம்பிக்கை

**பாலன்**




ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய பாராளுமன்ற விவகார ஆலோசகருமான பேராசிரியர் அஷூ மாரசிங்க அண்மையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் 'துலாவ" விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போது மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கத் தயாராகிறார் என்றும் பிரசார நடவடிக்கைகளை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டார் என்றும் கூறியிருந்தார் அல்லவா?

இலங்கையின் கடன் நிலைவரம் குறித்து ஆளுநர் தவறான தகவல்களை வெளியிட்டுவருவதாகவும் மாரசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் ஆளுநரிடமிருந்து ஆட்சேபம் வந்ததையடுத்து 'துலாவ" நிகழ்ச்சியில் தான் கூறியவை தவறானவை என்று கூறி மாரசிங்க நிபந்தனையற்ற மன்னிப்பையும் கோரினார்.

ஆனால், ஆளுநர் வீரசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரோ இல்லையோ அது வேறு விடயம். இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு பெரும்பாலான இலங்கையர்கள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை விடவும் ஆளுநர் மீது கூடுதல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று ஆய்வொன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மாற்றுக்கொள்கைகள் நிலையத்தின் ஆய்வுப்பிரிவான "சமூக குறிகாட்டி" (Social Indicator) மேற்கொண்ட 'பொருளாதார சீர்திருத்த சுட்டெண்" ஆய்வில் தற்போதைய பொருளாதார நெருக்கடிகை தீர்த்து வைப்பதற்கு சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் மிகவும் நம்பிக்கை வைக்கக்கூடியவராகவும் பெரும்பான்மையான இலங்கையர்களின் நம்பிக்கையை பெற்றவராகவும் மத்திய வங்கி ஆளுநர் விளங்குவதாக கண்டறியப்பட்டுள்ளது.



பொருளாதார நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கு சரியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவர் என்று ஆளுநர் மீது 57 சதவீதமான இலங்கையர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் 31.4 சதவீதமானவர்கள் மாத்திரமே அவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

சீர்திருத்தங்களை முன்னெடுத்து பொருளாதார நிலைவரத்தை மாற்றியமைக்கும் பணிகளைப் பொறுத்தவரை இரண்டாவதாகவே ஜனாதிபதி விக்கிரமசிங்க மீது இலங்கையர்கள் (45 சத வீதமானோர்) நம்பிக்கை வைத்திருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது.

அதேவேளை, பொது நிதிக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா மூன்றாவது இடத்திலும் (43 சதவீதம் ) அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நான்காவது இடத்திலும் (25 சதவீதம்) இருக்கிறார்கள்.

பொருளாதார நிலையுறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய குறுகியகால மற்றும் நடுத்தரகால செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய கவுன்சில் உப குழுவின் தலைவர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க ஐந்தாவதாக (23 சதவீதம்) இலங்கையர்களினால் நம்பிக்கை வைக்கக்கூடியவராக விளங்குகிறார்.



அதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் அணுகுமுறையை பெரும் பான்மையான (61 சத வீதம்) இலங்கையர்கள் அங்கீகரிக்கிறார்கள். நெருக்கடியை வெற்றி கொள்ள நாணய நிதியத்தின் உதவியினால் இயலும் என்று நாட்டு மக்களில் 75 சதவீதமானவர்கள் நம்புகிறார்கள். அரசாங்கத்தின் அணுகுமுறையில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாக 20 சதவீதமானவர்களே இருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சீனா உதவும் என்று 37 சதவீதமான இலங்கையர்கள் நம்புகிறார்கள். இந்தியா உதவும் என்ற கருத்தைக் கொண்டவர்களாக சுமார் நான்கில் ஒரு பங்கு (24 சதவீதம்) மக்களும் ஜப்பான் உதவும் என்று நம்புபவர்களாக 14 சதவீதமான மக்களும் இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகள் உதவும் என்று 10 சதவீதத்துக்கும் குறைவான இலங்கையர்களே நம்புகிறார்கள்.

பொருளாதார கொள்கைகளைப் பொறுத்தவரை, நாட்டில் வெளிநாட்டு கம்பனிகள் முதலீடுசெய்ய அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் என்று இலங்கையர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் (56 சதவீதம்) நம்புகிறார்கள் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையக் குறைப்பதற்கு ஆதரவாக சனத்தொகையில் பெரும்பான்மையானவர்கள் (50.1 சத வீதம் ) இருக்கின்ற போதிலும் அரசாங்க கூட்டுத்தாபனங்களை தனியார் மயமாக்குவதை அவர்கள் (52.1சத வீதம் ) எதிர்க்கிறார்கள்.

அதேவேளை உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டத்தின் மூலமாக வரிகள் உயர்த்தப்படுவதை சுமார் 64 சதவீதமான இலங்கையர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 35 சதவீதமானோர் அந்த சட்டத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தின் எதிர்காலம் குறித்து 41 சதவீதமான இலங்கையர்கள் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துவதாகவும் 30 வயதில் உள்ளவர்களும் அவர்களை விட கூடுதல் வயதில் உள்ளவர்களும் பொருளாதார எதிர்காலம் குறித்து கடுமையான அவநம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.


சுயதொழில் செய்பவர்களும் தனியார்துறையில் வேலை செய்பவர்களும் இதே மனோ நிலையையே கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு வருட காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைவரம் மேம்படும் என்று 18 சதவீதமானவர்கள் மாத்திரமே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதேவேளை, சந்தர்ப்பம் கிடைக்குமானால் இன்னொரு நாட்டுக்கு சென்றுவிடுவதற்கு சுமார் 60 சத வீதமான இலங்கையர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்ததையும் விட தங்களது பொருளாதார நிலைவரம் இப்போது படுமோசமானதாகிவிட்டதாக அதிகப்பெரும்பான்மையான இலங்கையர்கள் (79 சதவீதம்) கூறுகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் விளைவாக தங்களது உணவுப் பொருட்களின் நுகர்வு அல்லது கொள்வனவின் தரம் மாற்றமடைந்துவிட்டது என்று 82 சதவீதமான இலங்கையர்கள் கூறுகிறார்கள்.

தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் கடந்த சில மாதங்களாக ஆராயப்படுகின்ற பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பிலேயே நாடளாவிய ரீதியிலான இந்த ஆய்வின் போது மக்களிடம் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. ஆய்வுக்கான களப்பணி 2022 அக்டோபர் 21 தொடக்கம் 31 வரை மேற்கொள்ளப்பட்டது.





# இஸ்லாமிய ஷரியா சட்டம்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சில நாடுகளில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். நாங்கள் அப்படி செய்யவில்லை, ஆனால் தேசிய நலனுக்கு எதிராக யாராவது குரல் எழுப்பினால் அவர்கள் அமைதியாக்கப்படுவார்கள்," எனக் கூறுகிறார் முகமது அகிஃப் முஹாஜர்.

அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும், பெண்கள் மீதான, அவர்களின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் மீதான தாலிபன்களின் நிலைப்பாடு கடினமானவை எனக் காட்டுகின்றன. கடந்த ஆண்டு அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து அவர்கள் சித்தரிக்க முயன்ற மிதமான பிம்பத்திற்கு இது முரணாக உள்ளது.

"ஒரு நாள் பெண்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாது எனக் கூறப்படலாம்," என்று இளம் மாணவி கூறினார்.

சர்வதேச சமூகத்தின் மீதான ஏமாற்றம் ஆப்கா னிஸ்தான் பெண்களிடையேயும் வெளிப்படுகிறது.

"உலகம் எங்களைப் புறக்கணித்து விட்டது. உலகெங்கிலும் உள்ள சக்தி வாய்ந்த மக்கள் ஈரான் பெண்களுக்கு ஆதரவளிக்கிறார்கள். ஆனால் ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு ஆதரவளிக்கவில்லை.

எங்களுக்கு நடப்பவை முதல் பக்க செய்தியாவதில்லை. நாங்கள் உடைந்து விட்டதைப் போல, மறக்கப்பட்டுவிட் டதைப் போல உணர்கிறோம்," என்கிறார் லைலா பாசிம்.

(பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ...........................................................................

ii) old / How / you? / are : ......................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : .......................................................................................

ii) அங்கே பாருங்கள் : ....................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

## கல்வி tv CHANNEL-1

**06.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**06.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# காரைதீவு பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்!

அம்பாறை, டிசெ. 06

காரைதீவு பிரதேச சபையின் ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் நேற்று திங்கட் கிழமை ஏக மனதாக நிறைவேறியது.

சபையின் 58 ஆவது மாதாந்த அமர்வு நேற்று திங்கட்கிழமை சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. ஒன்பது உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

அடுத்த வருடத்திற்கான இந்த வரவு-செலவுத்திட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

அதன்படி ஏகமனதாக இந்த ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.

நேற்றைய அமர்வில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பித்தபோது உப தவிசாளர் ஏ.எம்.ஜாகீர் மற்றும் உறுப்பினர்களான ஏ.எல். ஜலீல், கே.ஜெயதாசன் ஆகியோர் சமுகமளித்திருக்கவில்லை.

நேற்றைய அமர்வில் காரைதீவு விபுலானந்தா தேசிய கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களான மாணவர்கள் மற்றும் அதிபர் ம.சுந்தரராஜன் ஆசிரியர் எஸ். இராஜேந்திரன் ஆகியோருடன் சமூக மளித்து சபை அமர்வை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

சபை அமர்வின் இறுதி நேரத்தில் உபதவிசாளர் ஜாகீர் சமுகளித்திருந்தார். (அ)

# இனப்பிரச்னையை சூடாக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

## சாடுகிறார் முபாரக் அப்துல் மஜீத்

அம்பாறை, டிசெ. 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனப்பிரச்னையை சூடாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலை ஏற்படுகின்றபோது தமிழ், முஸ்லீம் கலவரம் ஏற்படும். இரு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் இல்லாமல் போகும். இதன் மூலம் தாங்கள் தொடர்ந்தும் அதிகாரத்திற்கு வரமுடியும். இதனால்தான் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபை வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். பாராளுமன்ற அதிகாரங்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸூம் மக்கள் மத்தியில் மோதல்களை உருவாக்கும் வழிமுறைகள்தான் வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரமாகும் என ஐக்கிய காங்கிரஸ்



தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கல்முனை பகுதியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாவட்ட சபையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அவர்களின் அறிக்கையில் இருந்து தெரிய வருகின்றது.

எதையும் இலகுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஏற்றுக்கொள்ளாது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

மாகாண சபையைகூட விடுதலைப்புலிகள் மறுத்து ஏற்காது வந்துள்ளதை நாம் அறிகின்றோம். பின்னர் விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மாகாண சபையை ஏற்றுக்கொண்டு தேர்தலிலும் போட்டியிட்டிருந்தது. மக்களின் பிரச்னைகளை தீர்க்கவேண்டும்.

நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது நாங்கள் ஆராய்ந்த அளவில் ஒரு நிலைப்பாட்டில் இல்லை என்பது தான் உண்மையாகும். -என்றார். (அ)

# அல் ஹாமியா அரபு கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது

கல்முனை, டிசெ. 06

கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியின் 6ஆவது



பட்டமளிப்பு விழா சனிக்கிழமை மன்னர் பைசல் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவின் பேராசிரியரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த விழாவில், 105 மௌலவிகளுக்கும் 23 ஹாபிழ்களுக்கும் பட்டம் வழங்கப்பட்டது. தமது திறமைகளை வெளிப்படுத்திய இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப்பங்காற்றிய முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆளுநர் சபை உறுப்பினர்களும் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (ஐ-01)

# மட்டு. அரச காரியாலயங்களில் விசேட டெங்கு பரிசோதனைகள்



மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பில் அரச காரியாலயங்களில் டெங்கு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று திங்கட்கிழமை பொது சுகாதார அதிகாரிகள் அரச காரியாலயங்கள் மற்றும் பொலிஸ் தலைமையகத்தை முற்றுகையிட்டு இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அரச காரியாலயங்களான வனப்பரிபாலன திணைக்களம், மட்டு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையம் உள்ளிட்ட அரச காரியாலயங்களில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நுளம்பு பெருகும் அரச காரியாலயங்களுக்கு சிவப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தொல்பொருள் திணைக்களத்தின் அலுவலர் உள்ளிட்ட 6 பேர் கைது!

திருமலை, டிசெ. 06

திருகோணமலை, அபயபுர பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அபயபுர - லெனின் மாவத்தையில் வீடொன்றில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த போது வீட்டு உரிமையாளர் உட்பட ஆறு பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கந்தளாய், காலி, நீர்கொழும்பு, அம்பாறை, தீகவாபி பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 28, 35 வயதுகளை உடையவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட குறித்து சந்தேக நபர்கள் ஆறு பேரையும் திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இழுவை படகில் நாட்டைவிட்டு தப்ப முயற்சித்த 20 பேர் கைது !

திருமலை, டிசெ. 06

திருகோணமலை கடற்பரப்பில் உள்ளூர் மீன்பிடி இழுவை படகில் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்ற 20 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

கடற்பரப்பில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 16 ஆண்களும், 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் மற்றும் மூன்று சிறுவர்களும் 6 பேர் மோசடியில் ஈடுபட்டவர்களும் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கஜுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, மூதூர், யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத குடியேற்ற முயற்சிகளைத் தடுப்பதற்காக, கரையோரப் பகுதிகளில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு





## ரஷ்யாவின் தெற்கில் இறந்து கரையொதுங்கிய 2,500 சீல்ஸ்!

மொஸ்கோ, டிசெ. 06

தெற்கு ரஷ்யாவில் உள்ள கஸ்பியன் கடல் கடற்கரையில் சுமார் 2,500 சீல்ஸ் கடற்பிராணிகள் இறந்து கிடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடற்கரையில் 700 இறந்த சீல்ஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக முதல் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், மேலதிக விசாரணைக்குப் பிறகு, ரஷ்ய இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்த எண் ணிக்கை சுமார் 2,500 என தெரிவித்தது. இது இன்னும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்முறை இறப்புக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்றும் இயற்கை காரணங்களால் சீல்ஸ்கள் இறந்திருக்கலாம் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கஸ்பியன் சீல்ஸ்கள் அழிவடையும் நிலையில் உள்ளதாக 2008 முதல் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் சிவப்பு பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கஸ்பியன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் தலைவர் ஒரு அறிக்கையில், இறப்புகள் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்ததாகத் தெரிகிறது. விலங்குகள் கொல்லப்பட்டதாகவோ அல்லது மீன்பிடி வலையில் சிக்கியதாகவோ எந்த ஆதாரமும் இல்லை-என்றார். (அ)

## நைஜீரிய வழிப்பாட்டு தலத்தில் துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலி!



அபுஜா, டிசெ. 06


நைஜீரியாவில் மதவழிப்பாட்டு தலத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலியாகினர்.

கட்சினா மாகாணத்தில் உள்ள மசூதி ஒன்றில் இரவில் தொழுகை நடைபெற்று கொண்டிருந்தது. அப்போது துப்பாக்கியேந்தி நுழைந்த மர்மநபர்கள், தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டனர்.

மேலும் பலரை வாகனத்தில் ஏற்றி கடத்திச் சென்றனர். இதில் கிராமமக்கள் உதவியுடன் சிலர் மீட்கப்பட்டனர். (அ)

# ஈரானின் கலாசாரக் காவலர் பொலிஸ் பிரிவை மூடவில்லை

### அரசு செய்தி நிறுவனம் அறிவிப்பு



தெஹ்ரான், டிசெ. 06

ஈரானின் கலாசார காவலர் பொலிஸ் பிரிவு மூடப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை, ஈரான் அரசு நடத்தும் அல்-ஆலம் செய்திச்சேவை மறுத்துள்ளது.

முன்னதாக ஞாயிற்றுக் கிழமை, நாட்டின் கடுமையான ஆடைக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள இஸ்லாமியக் குடியரசு அதன் கலாசார காவலர் பொலிஸ் பிரிவைக் கலைத்துவிட்டதாக பல செய்திகள் தெரிவித்தன.

சனிக்கிழமையன்று ஒரு மத மாநாட்டில் ஈரானின் சட்டமா அதிபர் முகமது ஜாபர் மொண்டசெரி கூறிய கருத்துக்களை மேற்கோள்காட்டி அந்த செய்திகள் வெளியாகின.

அரை-அதிகாரபூர்வ ஐ.எஸ்.என்.ஏ செய்தி நிறுவனத்தின் படி, மொண்டசெரியிடம் ஒரு பங்கேற்பாளர் "ஏன் கலாசார காவல் காவல்துறை மூடப்பட்டது" என்று கேட்கப்பட்டது. அதற்கு மொண்டசெரி பதிலளித்தார்: "கலாசார காவல் பொலிஸுக்கும் நீதித்துறைக்கும் எந்த தொடர்பும் இல்லை, அதை நிறுவிய மக்களாலே அது மூடப்பட்டது." என்றார்.

"நிச்சயமாக இருந்தாலும், சமூகம் முழுவதும் உள்ள சமூக நடத்தைகளை நீதித்துறை தொடர்ந்து கண்காணிக்கும்," என்று அவர் மேலும் கூறினார்.

எனினும், அல்-ஆலம் செய்திச்சேவை"ஈரான் இஸ்லாமிய குடியரசில் உள்ள எந்த அதிகாரியும் கலாசார காவலர் பொலிஸ் பிரிவின் மூடலை உறுதிப்படுத்தவில்லை." என தெரிவித்தது.

மொன்டசெரியின் கருத்துக்களின் அடிப்படையில், கலாச்சார காவலர் பொலிஸ் பிரிவுக்கும் நீதித்துறைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அல்-ஆலம் கூறியது.

"சில வெளிநாட்டு ஊடகங்கள் சட்டமா அதிபரின் அறிக்கையை இஸ்லாமியக் குடியரசு அதன் ஹிஜாப் (சட்டங்கள்) லிருந்து விலகியதாகவும், சமீபத்திய கலவரங்களால் தாக்கம் செலுத்தியதாகவும் வகைப்படுத்த முயன்றன" என்று அது மேலும் கூறியது.

22 வயதான ஈரானிய குர்திஷ் பெண் மஹ்சா அமினி கலாசார காவலர் பொலிஸ் பிரிவினால் கைதாகி கடுமையாக தாக்கப்பட்ட பின் மூன்று நாட்களில்- செப்ரெம்பர் 16 உயிரிழந்தார். அன்று முதல் ஈரான் முழுவதும் எதிர்ப்புகள் தீவிரமடைந்துள்ளன. ஈரான் அரசு இதனை "கலவரங்கள்" என்று குறிப்பிடுகிறது.

1979 இல் இஸ்லாமியக் குடியரசு நிறுவப்பட்டதில் இருந்து மிகத் துணிச்சலான சவால்களில் ஒன்றாக மாறியுள்ள தற்போதைய போராட்டங்களில் ஆட்சியை வீழ்த்துவதற்கு ஆர்ப்பாட்டக் காரர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஈரானின் 1979 புரட்சிக்குப் பின்னர் விரைவில் பெண்களுக்கு கட்டாயப்படுத்தப்பட்ட ஹிஜாப் அணிவது, ஆட்சியிலிருந்த ஜனாதிபதிகளின் தாராளவாத சிந்தனையின் அடிப்படையில் மென்மையாக அணுகப்பட்டது. எனினும், தற்போது ஆட்சியிலுள்ள பழைமைவாத ஜனாதிபதி ரைசியின் நிர்வாகத்தில், ஆடைக் கட்டுப்பாட்டை மீறும் பெண்கள் ஈரானின் கலாசார காவலர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஆடைக் குறியீட்டின் அடிப்படையில், பெண்கள் பொது இடங்களில் தங்கள் தலைமுடியை முழுமையாக மறைக்க வேண்டும் மற்றும் நீண்ட, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும். (அ)

## ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்ய இந்தியாவுக்கு தலிபான்கள் அழைப்பு

காபூல், டிசெ. 06

ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்யுமாறும், கைவிடப்பட்ட உள்கட்டமைப்பு பணிகளை மீண்டும் தொடங்குமாறும் இந்தியாவுக்கு தலிபான்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அரசு அமைந்த பிறகு அங்கு மேற்கொண்டு வந்த பணியை இந்தியா இடைநடுவே நிறுத்திவிட்டது. இந்நிலையில் ஆப்கான் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் ஹம் துல்லா நோமானி மற்றும் இந்திய அதிகாரிகள் குழுவினரை கடந்த வாரம் சந்தித்துப் பேசினர்.

அப்போது அவர்களிடம், ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்யும்படியும், இந்தியாவின் முதலீடுகளுக்கு தகுந்த பாதுகாப்பு செய்து தரப்படுமெனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# ஷங்காய் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கோவிட் கட்டுப்பாடுகளை எளிதாக்கியது சீன அரசாங்கம்!

பீஜிங், டிசெ. 06

கடந்த மாதம் முன்னோடியில்லாத போராட்டங்களின் அலையைத் தொடர்ந்து சீனா முழுவதும் குறைந்தது ஒரு டசன் நகரங்கள், கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

ஷங்காய் பொதுப் போக்குவரத்துக்கான சோதனைகளை இரத்து செய்த கடைசி பெருநகரமாக மாறியது மற்றும் உரும்கி, வணிக வளாகங்கள் மற்றும் உணவகங்களை மாதங்களில் முதல் முறையாக மீண்டும் திறக்கிறது.

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவோ அல்லது வெளிப்புற இடங்களுக்குள் நுழையவோ எதிர்மறையான சோதனை முடிவு தேவைப்படாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பூங்காக்கள் மற்றும் சுற்றுலா தலங்களுக்கும் இது பொருந்தும்.

பீஜிங், ஷென்சென், செங்டு மற்றும் தியான்ஜின் போன்றவற்றின் இதேபோன்ற நகர்வுகளை இந்த தளர்த்துதல் பின்பற்றுகிறது. இவை அனைத்தும் சனிக்கிழமையன்று பொது போக்குவரத்துக்கான சோதனைத் தேவையை ரத்து செய்தன.

அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் முதன் முதலில் வெடித்த சின்ஜியாங் பிராந்தியத்தின் தலைநகரான தூர-மேற்கு உரும்கியில், உணவகங்கள் டேக்அவே சேவைகளுக்கு கதவுகளைத் திறந்தன. திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் பூங்காக்கள் படிப்படியாக திறக்க அனுமதிக்கப்படும், அரங்குகளுக்குள் நுழைய அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையில் வரம்புகள் உள்ளன. (அ)



## விளக்கீட்டில் மக்கள் ஆர்வம்!



யாழ்ப்பாணம், டிசெ. 06

திருக்கார்த்திகை விரதத்தை முன்னிட்டு சந்தையில் விளக்குகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்தில் உள்ள சந்தை வியாபார நிலையங்களில் விளக்குகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுப்பட்டிருந்தனர்.

இதேவேளை, யாழ். நல்லூர், திருநெல்வேலி வியாபார நிலையங்களிலும், சந்தைப் பகுதியிலும் விற்பனை மும்முரமாக இடம்பெற்றது.

இதன்படி நாளை புதன் கிழமை வீடுகளில் திருக்கார்த்திகை திருநாள் இடம்பெற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி ரணில் இன்று நிற்கும் பக்கம் தவறானது

## தர்மத்தின் வழியில் அவரை எதிர்க்கின்றோம் என்கிறார் ராதா

கொழும்பு, டிசெ. 06

ஜானாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லவர் ,சிறந்த அறிவாளி. ஆனாலும் அவர் தற்போது நிற்கும் பக்கம் தவறானது. எனவேதான் தர்மத்தின் வழி சென்று அவரை நாம் எதிர்க்கின்றோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போராட்டக்காரர்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட மாட்டாது என பிரதமரான பின்னர் ரணில் விக்கிரமசிங்க



அறிவித்தார். ஆனால் ஜனாதிபதியான பிறகு மறு நொடியே போராட்டக்காரர்களை அகற்றினார். சொல் ஒன்று செயல் வேறு வடிவம் என்பதை அவர் நிரூபித்தார். உண்மையின் வழி நின்றகவில்லை.

கர்ணன் சிறந்தவர், நல்ல கொடையாளி, துரியோதனன் கூட்டத்துடன் நின்றதால் அவர் வதம் செய்யப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது இருக்கும் இடம் சரியில்லை. நாம் தர்மத்தின் பக்கம்தான் நிற்போம். ரணிலும், மஹிந்தவும் தர்மம் செய்யவில்லை. எனவே, தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

## ஷானியின் பாதுகாப்புக்கு ஆயுதம் தாங்கிய 2 பொலிஸ்

கொழும்பு, டிசெ. 06

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவின் பாதுகாப்புக்கு பொலிஸாரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஷானி அபேசேகரவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடுமாறு கோரி அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய இதனை அறிவித்தார்.

மனுதாரர் ஷானி அபேசேகரவின் பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய இரண்டு பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளதாக மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் மேலும் கூறினார். (அ)

## நீதிமன்ற களஞ்சியத்தில் தங்கக் கட்டிகள் மாயம்!

கொழும்பு, டிசெ. 06

கொழும்பு- புதுக்கடை பிரதான நீதவான் நீதிமன்றின் வழக்கு பொருள்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த 8 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய தங்ககட்டிகள் காணாமல்போயுள்ளமை தொடர்பில் வாழைத்தோட்ட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த வழக்கு பொருட்கள் களஞ்சியசாலைக்கு பொறுப்பானவரால் இந்த மாதம் முதலாம் திகதி மாலை வாழைத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாளிகாவத்த பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 79.80 கிராம் நிறையுடைய தங்க கட்டி, பொரல்ல பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட104.39 கிராம் நிறையுடைய தங்கக் கட்டி மற்றும் உருக்கப்பட்ட 204.24 கிராம் நிறையுடைய தங்கமும் இவ்வாறு காணாமல் போயுள்ளது என உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 3 மடங்காக உயர்ந்த பாடசாலை கட்டணம்!

கொழும்பு, டிசெ. 06

அடுத்த வருடத்துக்காகப் பாடசாலைஅபிவிருத்தி சங்கத்தினால் அறவிடப்படும் கட்டணம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவு இதுவரை பெற்றுக் கொடுக்கப்படாமை காரணமாகவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் அறவிடப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## அதானி நிறுவன கட்டுப்பாட்டுக்குள் வரவுள்ள இலங்கை துறைமுகங்கள்?

கொழும்பு, டிசெ. 06

இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் இந்தியாவின் அதானி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படக்கூடும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைக்கு இந்தியாவின் கேரளம் மாநிலத்தில் உள்ள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகளை அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

அதன் மூலம் மின்சக்தி, எரிவாயு விநியோகம் மட்டுமன்றி 23.5பில்லியன் ரூபா பெறுமதியான துறைமுக வழங்கல் நிலையமொன்றையும் அதானி நிறுவனம் பெற்றுக்கொள்ளவுள்ளது.

எனினும் விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் காரணமாக தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக உள்ளூர் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் கடந்த நான்கு மாதங்களாக தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

கேரள விளிஞ்சம் துறைமுக நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இலங்கையில் அதானி நிறுவனம் கால் பதிக்கும் என்றும் முக்கிய துறைமுகங்களை தன் வசப்படுத்திக் கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 1 1/2மில்லியன் சுற்றுலாப்பயணிகளை அடுத்த ஆண்டில் வரவழைக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 06

அடுத்த ஆண்டில் இலங்கைக்கு குறைந்த பட்சம் ஒன்றரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு தற்போதைக்கு தென்னிலங்கையின் காலி உள்ளிட்ட பிரதேசங்களில் கூடுதலான சுற்றுலாத் தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

அதற்கு மேலதிகமாக வடக்கில் பாரிய பொழுது போக்குப் பூங்கா மற்றும் கிழக்கின் மட்டக்களப்பில் சுற்றுலா நகரம் ஒன்றை அமைக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான திட்டங்களின் மூலம் அடுத்த ஆண்டில் குறைந்த பட்சம் ஒன்றரை மில்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# தோல்வியை தாமதப்படுத்தவே தேர்தலைப் பிற்போட முயற்சி!

## அரசை சாடுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, டிசெ.06

**உள்ளூராட்சி தேர்தலைப் பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**



தோல்வியை தாமதப்படுத்தி கொள்வதற்காகவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது என்றும் தேர்தல் பிற்போடப்பட்டால் அதன் விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலைப் பிற்போட்டபோது தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளமையானது வேடிக்கையானது என்றும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

தோல்வியை பிற்போடுவதற்காக அரசாங்கம் தேர்தலை பிற்போட்டால் வாக்குரிமைக்காக நீதிமன்றத்தை நாடவும் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார். (அ)

# துறைமுக அதிகார சபை வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 06

இலங்கை துறைமுக அதிகார சபை 2022 இல் துறைமுக செயற்பாடுகள் மூலம் 39 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளது.

துறைமுக அதிகாரசபையின் வருமானம் இவ்வருடம் 24 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.


இருப்பினும் 2021 ஆம் ஆண்டில் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே கிடைத்ததாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கொரோனாவுக்கு பிந்திய காலகட்டத்தில் பண்டங்களுக்கான போக்குவரத்து நடவடிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்ததே வருமான உயர்வுக்குக் காரணம் என அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகின்றது

யாழ்ப்பாணம், டிசெ. 06

தென் கிழக்கு வங்கக் கடல், அதை ஒட்டிய அந்தமான கடல் பகுதிகளில் புதிய காற்றழுத்த பகுதி உருவாகி அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறலாம் என்று சென்னை ஆய்வு மண்டலம் தெரிவித்துள்ளது.



இது மேற்கு - வடமேற்கு திசையில் நகரும். இதனால், நாளை முதல் இலங்கையின் வடக்கு - கிழக்கு கரையோரப் பகுதியில் மணிக்கு 50 - 60 கிலோமீற்றர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோமீற்றர் வேகத்திலும் காற்று வீசக்கூடும். மன்னார் வளைகுடாவில் 40 - 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும்.

8ஆம் திகதி இலங்கையின் கரையோரப் பகுதி, மன்னார் வளைகுடாவில் காற்று 70 கிலோமீற்றர் வேகம் வரை வீசக்கூடும். இதனால், மீனவர்களை இந்தப் பகுதிகளில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# நவீன முறை உருளைக்கிழங்கு உற்பத்திக்கு யாழ்.மாவட்டத்தில் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ் .மாவட்டத்தில் நவீனமுறையில் உருளைக்கிழங்கு உற்பத்தியினை மேற்கொள்வதற்கு உள்ளீடுகள், உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

வடமாகாண விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்டப் பணிப்பாளரின் தலைமையில் யாழ்.மாவட்ட நவீன விவசாய உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கமும் இணைந்து இதனை வழங்கின.

இதில் சுமார் 190 விவசாயிகள் கலந்து கொண்டதோடு சுமார் 190 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டன.





இந்த நிகழ்வில் வடமாகாண பிரதமசெயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எ.சிவபாலசுந்தரம், வடமாகாண விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்ட பணிப்பாளர் வி.விஜிதன், விவசாய போதனாசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# காணி வழங்கல் தொடர்பில் விரைவில் புதிய சட்டம் வரும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 06

நாட்டிலுள்ள அரச காணிகள் எதற்காக ஏனையோருக்கு வழங்கப்படுகிறது என்பது தமக்கு தெரியாது என்றும் ஒவ்வொரு நிறுவனங்களும் அவற்றின் விருப்பத்திற்கு ஏற்ப காணிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



ஆகவே இதனை நிறுத்தி புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தி அதன் ஊடாக உருவாக்கப்படும் திணைக்களத்தின் ஊடாக காணி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் 25 ஆண்டுகளுக்குள் சிறந்தும், பலம்மிக்கதுமான பொருளாதாரத்தை உருவாக்குவதே தனது எதிர்பார்ப்பு என்றும் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்திலிருந்து இது ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2023 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ)

# சு.க. மத்திய குழுவின் முடிவுக்கு நிறைவேற்று சபையும் அனுமதி

கொழும்பு, டிசெ. 06

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை அரசாங்கப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் மத்திய குழு முடிவு எடுத்திருந்தது.

இந்த தீர்மானத்துக்கு நிறைவேற்றுச் சபையும் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு நேற்று முன் தினம் பிற்பகல் கட்சியின் தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது.

இதன்போது குறித்த அங்கீகாரம் கிடைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறினார்.

எதிர்காலத்தில் கட்சி மீதான விமர்சனங்களுக்கு மக்களுடன் இணைந்து பதிலளிப்போம் எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டார். (அ)

# தேசிய சொத்துக்களை திருடிய அனைவருக்கும் தண்டனை கிட்டும்



## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, டிசெ. 06

தேசிய சொத்துக்களை கொள்ளையிட்ட அனைவரும் தமது ஆட்சிக் காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவலை தேர்தல் தொகுதி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்குள்ள ஒரே யொரு மாற்று வழி ஐக்கிய மக்கள் சக்தி.

நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளபோதிலும், போதைப் பொருள் கடத்தல், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

எவ்வாறாயினும் எமது ஆட்சியில் சட்டம், ஒழுங்கு அமைச்சராக பொறுப்பேற்கும் சரத் பொன்சேகாவினால் நாட்டில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை என்பன முற்றாக ஒழிக்கப்படும்.

புதிய பொருளாதார முறையொன்றை அறிமுகப்படுத்தி ஏற்றுமதியை கேந்திரமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்கி நாட்டை முன்னேற்றுவோம்-என்றார். (அ)

## 60சதவீதமான...

மேலும், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகவே ஐஸ் போதைப் பொருள் பாவனை மற்றும் வர்த்தகத்துக்கு அதிகூடிய தண்டனையாக மரண தண்டனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரத்தை பிரதான சவாலாக எதிர் கொண்டுள்ளது.

சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள். ஐஸ் போதைப்பொருளுக்கு எதிரான சட் டம் உருவாக்கப்பட்டு அதன் பாவனை மற்றும் வியாபாரத்துக்கு அதிகபட்ச தண் டனை மரண தண்டனையாக சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

சட்டத்தை முறையாக செயல்படுத்தும் தரப்பினர் ஊடாக கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் நீதிமன்ற வழக்கு நிறைவடைவதற்கு முன்னர் சமூகமயப் படுத்தப்படுகிறது. இது பாரதூரமான பிரச்னையாகும்.

ஒருசில பொலிஸ் அதிகாரிகள் போதைப்பொருள் சமூக மயப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுப்படுகிறார்கள். நீதிமன்றங்களில் பல ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளுடன் தொடர்புடைய பழமையான சட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் செயல்பாடுகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நிறைவு செய்யப்பட்ட 1,653 ஆவணங்கள் நீதியமைச்சிடம் கையளிக் கப்பட்டுள்ளன. 1,653 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 3,520 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. 5,246 குடும்பங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## காணி...

முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

மகாவலி திட்டத்தின் கீழ், தற்போது காணிகளை அளக்கும் செயல்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும், அந்தக் காணிகளை வேறு இனங்கள் அபகரிப்பதை அனுமதிக்க மாட்டோம் என்று கூறியே விவசாயிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், சோள பயிர்ச் செய்கை - மகாவலி வலயம் என்ற பெயரில் தமிழ் பேசும் மக்களின் காணிகளை அபகரித்து பெரும்பான்மை இனத்தை கொண்டுவந்து குடியமர்த்துவதற்கான திட்டமிட்ட சதி நடவடிக்கையாக அரசு இதை முன்னெடுப்பதாக போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு சென்ற கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு போராட்டக்காரர்களுடன் பேசினார். இதன்போது, காணி அளக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது. வரும் 12 ஆம் திகதி மகாவலி உத்தியோகத்தர்களுடன் விவசாயிகள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஐ)

## யாழ்ப்பாணம்...

தூதுவர் ஜூலி ஷங் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் நேற்றுக் கையளித்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, மொனராகலை மாவட்டங்களுக்கு வழங்கப் பட்ட இந்த உரம் இது முதல் கட்ட உதவி என்றும், விரைவில் நாடு முழுவதும் உள்ள 10 இலட்சம் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்ற, "அமெரிக்க மக்களால் வழங்கப்படும் இந்த உரமானது, இலங்கை விவசாயிகளுக்கு எதிர்வரும் மாதங்களில் எண்ணற்ற இலங்கை குடும்பங்களுக்கு உணவளிக்க உதவும்" என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஷங் குறிப்பிட்டார். (ஐ)

## யாழின்...

தண்ணீருக்கான மக்களின் பணம் தென்னிலங்கை செல்கிறது. ஏழை வீட்டின் மரண சடங்கு முதல் தண்ணீர் போத்தலால் பணம் மேலதிக செலவாகிறது.

கடந்த சில காலத்துக்கு முன்பாக கிணற்று நீரில் 'ஒயில்' கலந்துவிட்டது, நீர் மாசடைந்து விட்டது மற்றும் ஊற்றுக்கள் பயனற்றுவிட்டன என்று பல போராட்டங்கள் - கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இது தற்போது அமைதியாகி விட்டது.

இதனைப் பயன்படுத்தி அன்று ஆரம்பித்த தண்ணீர் போத்தல் வியாபாரம், இன்று மரணசடங்குகள், வீட்டு விழாக்கள், கலை நிகழ்வுகள் மற்றும் மண்டப விழாக்கள் என அனைத்து இடங்களிலும் கொடிகட்டிப் பறக்கிறது. போத்தல் தண்ணீரை பயன்படுத்தலாமா எங்கு எப்படி தயாராகிறது இவை தொடர்பில் வெளிப்படுத்தல்கள் இருக் கின்றனவா?

ஆரம்ப காலங்களில் ஆலயங்களில் உள்ள கிணறுகளின் தண்ணீரை அனைவரும் விரும்பி குடிப்பார்கள் அதனைத் தீர்த்தம் என்றே குடிப்பார்கள். வீடுகளிலும் அவ்வாறே கிணற்றுநீரை பயன்படுத்தினார்கள். யாழ்ப்பாணத்து கிணற்று தண்ணீர் என்றாலே விரும்பிக் குடித்த காலம் மாறிவிட்டது. இன்று கிணற்றில் தண்ணீர் அள்ளினாலே பிரச்னை என்கிறார்கள்.

அந்தளவுக்கு போத்தல் தண்ணீரின் பயன்பாடு அதிகரித்துப் பணம் வீண் விரயமாகி வருகிறது. எனவே, யாழ்பாணத்து கிணற்று நீரை பயன்படுத்தலாமா இல்லையா என்பது பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானம், விவசாய, பொருளியல் துறை சார்ந்த வர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் ஒன்று கூடி குடாநாட்டின் மக்கள் குடி தண்ணீரை எப்படி பயன்படுத்தவேண்டும்?, கிணற்று நீரை பயன்படுத்தலாமா என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு சாதக, பாதகங்களை அறிவிக்க வேண்டும்.

உண்மையாகவே மக்களின் பணத்தில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் என்ற உணர்வு இருந்தால் இந்த தேச மக்கள்மீது உணர்வு இருந்தால் தண்ணீருக்காக குரல் கொடுக்கவேண்டும். யாழ். குடாநாட்டு தண்ணீர் பழுதடைந்து விட்டது எனப் பலரும் குரல் கொடுத்தார்கள் என்ன நடந்தது?

வடக்கு மாகாண சபை இருந்தது. முதலமைச்சர் உட்படப் பல பிரதிநிகள் இருந்தார்கள் என்ன செய்தார்கள் கிணற்று நீருக்கு முடிவுதான் என்ன? இது தொடர் கதையா?. எனவே, குறித்த விட யம் தொடர்பில் துறை சார்ந்தவர்கள் அக்கறை எடுத்து இதற்கான சரியான முடிவை அறிவிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# யாழ். வந்த சொகுசு பேருந்து தடம்புரண்டு 22 பேர் காயம்!

## நேற்று அதிகாலை துயரம்

கிளிநொச்சி, டிசெ. 06

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பேருந்து கிளிநொச்சி யில் தடம் புரண்டு விபத்துக்கு உள்ளான தில் 22 பேர் படுகாயம் மற்றும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.45 மணியளவில் இரணைமடு சந்திக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது.

இறந்து கிடந்த மாட்டின் மீது பேருந்து ஏறியதாலேயே தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் படுகாயமடைந்த 22 பேரும் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சேரக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## டீசலின்..

நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (சிபெட்கோ ) அறிவித்துள்ளது.

ஏனைய எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் சிபெட்கோ அறிவித்துள்ளது. (ஐ)

## எரிவாயுவின்...

2.3 கிலோ எடை எரிவாயு வின் விலை 45 ரூபாயால் அதிகரித்து 860 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த, நிர்ணய விலை மாவட்டங்களுக்கு ஏற்ப மாறுபடும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

## காணாமல்...

பேசினார். அத்துடன், அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண தம்மாலான அனைத்தையும் செய்ய உதவுவதாக உறுதியளித்தார். கூறியதுபோன்று, பாராளுமன்றிலும் இது தொடர்பில் தனது உரையிலும் அவர்களின் பிரச்னைக்கான தீர்வை வலியுறுத்தினார்.

தொடர்ந்து, அவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்கவோ அல்லது அவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்காமல் அங்கிருந்து சென்றுவிட்டார். காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து பாராளுமன்றிலும் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவுமில்லை.

இதேசமயம், நீதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் விவாதம் இடம்பெற்ற நிலையில், தமக்கான நீதியைக் கோரி காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் நடத்திய இந்தப் போராட்டத்தில் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளின் புகைப்படங்களை கைகளில் ஏந்தியவாறு தமது துயரத்தை வெளிப் படுத்தியவாறு எதிர்ப்பை பதிவு செய்தனர்.

"பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் குடும்பத்துக்கு நட்ட ஈடான ஒரு கோடி ரூபாய் - மிகச்சிறப்பு

காணாமல்போன மற்றும் படு கொலை செய்யப்பட்டோரின் குடும்பத்தாருக்கு என்ன?", என்று எழுதப் பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை அவதானித்த எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன அந்த இடத்துக்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடினார். நீதி அமைச்சரின் கவனத்துக்கு இந்த விடயத்தை எடுத்து செல்வார் என்று உறுதியளித்திருந்தார். (ஐ)

## வடக்கு...

சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா அறிக்கை வெளியிட்டார். இதேசமயம் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்போது, வடக்கு ஆளுநரால் 2022-10-27 அன்று வெளியிட்ட இரு வர்த்தமானிகளையும் உடனடியாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைய இரு வர்த்தமானிகளும் இந்த வாரம் இரத்துச் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## தேர்தலை...

ஆதரவு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்த அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமல் போனதற்கும் மன்னிப்பும் கோரினார்.

அத்துடன், பின்னடைவுகளை நிவர்த்தி செய்து, தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகைமை தனக்கு இல்லை என்றாலும், அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன். மீண்டும் பாராளுமன்றம் பிரவேசிக்க முடியாமல் போனதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றும் சொன்னார். (ஐ)

## 2023இல்...

தயார்படுத்தும் பணிகள் தற்போது நடை பெற்று வருகின்றன. சில பிரச்னைகள் இருந்தா லும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என சட்டமா அதிபர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறி வித்துள்ளார். இதனால், ஏகமனதாக தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சி எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நியமனத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அறிவிப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறுவதற்கு ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்துள்ளது. இதன்படி, சட்டமா அதிபரின் பரிந்துரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது.

தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுவதானால் அது தொடர்பான வர்த்தமானி ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் இந்த வாரம் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சவூதி அரேபியா கழகத்தில் றொனால்டோ இணைந்தார்

*200 மில்லியன் யூரோவுக்கு ஒப்பந்தம்*



றியாத், டிசெ. 06

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான கிறிஸ்ரியானோ றொனால்டோ, சவூதி அரேபியாவின் அல் - நஸ்ஸர் உதைபந்தாட்ட கழகத்தில் இணைந்துள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது. சுமார் 200 மில்லியன் யூரோவுக்கு அவர் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்.

சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் போர்த்துக்கல் அணிக்காக றொனால்டோ விளையாடி வருகிறார். அது தவிர, கழக அளவிலான போட்டிகளிலும் ஸ்போர்ட்டிங் சிபி, மன்செஸ்டர் யுனைற்றெட், ரியல் மட்ரிட், ஜூவான்டஸ் என பல்வேறு அணிகளுக்காக அவர் விளையாடி உள்ளார்.

இந்நிலையில், மன்செஸ்டர் யுனைற்றெட் அணியுடனான கசப்பான உறவு காரணமாக அவர் வெளியேற்றப்பட்டார். ஒரு பேட்டி ஒன்றில் அணியுடன் தனக்கு இருக்கும் சங்கடங்களை அவர் பகிர்ந்தார். அதன்பின்னர் அணியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

தற்போது அவர் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வருகிறார். இப்படி இருக்கும் நிலையில் அடுத்ததாக அவர் விளையாட உள்ள கழக அணி குறித்து செய்திகள் வெளியாகியுள்ளது. (ஐ)



# குரோஷியா அபார வெற்றி!

டோஹா, டிசெ. 06

சமநிலை தவிர்ப்பு உதையில் அபாரமாக செயல்பட்ட குரோஷியா ஜப்பான் அணியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கட்டாரில் நடக்கிறது. இதில் நேற்றிரவு நடந்த போட்டியில் குரோஷியா - ஜப்பான் அணிகள் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் - 43ஆவது நிமிடத்தில் கோல் அடித்து முன்னிலை பெற்றது ஜப்பான்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் - 55ஆவது நிமிடத்தில் குரோஷியா பதில் கோல் அடித்தது. இறுதி வரை இரு அணிகளாலும் பின்னர் கோல் அடிக்க முடியவில்லை.

இறுதியாக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 1 - 3 என்ற கோல் கணக்கில் குரோஷியா காலிறுதிக்கு தகுதி பெற்றது. (ஐ)

*புதிய விடியல் உதைபந்தாட்டம்*

# யங்ஹென்றீஸ் அரையிறுதியில்!

யாழ்ப்பாணம், டிசெ. 06

புதிய விடியல் உதைபந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் அனுசரணையில் யாழ். உதைபந்தாட்ட லீக் புதிய விடியல் உதைபந்தாட்டப் போட்டியை நடத்துகிறது. துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடக்கும் இந்தத் தொடரில் நேற்று திங்கட்கிழமை நடந்த போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ், சென். லூட்ஸ் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால், சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி -தோல்வியை தீர்மானிக்கப்பட்டது. இதில், ஐந்து சந்தர்ப்பங்களில் இரு கோல் வாய்ப்புகளை யங்ஹென்றீஸ் தடுத்து விட்டது. இதைத் தொடர்ந்து 4 கோல்களை அடித்து யங்ஹென்றீஸ் போட்டியின் வெற்றியை தனதாக்கியது.

இன்று அரையிறுதி

அரையிறுதிப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. துரையப்பா பொது விளையாட்டரங்கில் பிற்பகல் 3.45 மணிக்கு நடக்கும் போட்டியில் சென். நீக்கிலஸ் - பாடும்மீன் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ஐ)

# முதல் டெஸ்ட் போட்டியை வென்றது இங்கிலாந்து!



லாகூர், டிசெ. 06

பாகிஸ்தான் அணியை 74 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது இங்கிலாந்து அணி.

முதல் டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தானில் 17 வருடங்களுக்குப் பிறகு டெஸ்டில் விளையாடும் இங்கிலாந்து அணிக்கு அற்புதமான தொடக்கம் கிடைத்தது. முதல் ஓவரிலேயே 14 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 657 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணி 579 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் இனிங்ஸில் இங்கிலாந்து 264 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் அதிகபட்சமாக ஹாரி புரூக் 87 ஓட்டங்களும், ஜோ ரீட் 73 ஓட்டங்களும், ஜாக் கிராவ்லி 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

வெற்றி பெற 343 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாம் இனிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி 268 ஓட்டங்களுக்கு மொத்த விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தானில் அதிகபட்சமாக சவுத் ஷகீல் 76 ஓட்டங்களும், இமாம் உல் ஹக் 48 ஓட்டங்களும், அசார் அலி 40 ஓட்டங்களும், ரிஸ்வான் 46 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து அணியில் ஜேம்ஸ் அண்டர்சன், ரொபின்சன் தலா 4 விக்கெட்டுகளை எடுத்தனர்.

இதன் மூலம் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது இங்கிலாந்து.

# உலகக் கிண்ண உதைபந்து; காலிறுதியில் இங்கிலாந்து!

அல் கோர், டிசெ. 06

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் செனகல் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது இங்கிலாந்து அணி.

இந்தத் தொடரில் ஹாரி கேன் முதன்முறையாக கோல் பதிவு செய்ததும் இந்தப் போட்டியில்தான். கடந்த 2018 உலகக் கிண்ணத் தொடரில் அதிகபட்சமாக 6 கோல்களை பதிவு செய்திருந்தார் கேன். அந்தத் தொடரில் அதிக கோல்களை பதிவு செய்த வீரரும் அவர்தான்.

கட்டார் நாட்டின் அல் கோர் நகரில் இந்தப் போட்டி நடந்தது.

முதல் சில நிமிடங்கள் இங்கிலாந்து அணிக்கு சவால் கொடுத்தனர் செனகல் வீரர்கள். ஆனால், முதல் பாதியின் கடைசி 10 நிமிடங்களில் 2 கோல்களை பதிவு செய்தது இங்கிலாந்து.

இரண்டாவது பாதியில் - ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலை பதிவு செய்தது இங்கிலாந்து அணி. மொத்த ஆட்ட நேரத்தில் பந்தை 62 சதவீதம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது



இங்கிலாந்து அணி. அதன் மூலம் 589 கடத்தல்களை மேற்கொண்டது அந்த அணி. செனகல் அணியால் ஒரு கோலை கூட பதிவு செய்ய முடியவில்லை.

இந்த வெற்றியின் மூலம் வரும் 11ஆம் திகதி நடைபெற உள்ள காலிறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது இங்கிலாந்து. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.